விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 204 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 27 சனிக்கிழமை (11.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### பொறுப்புக்கூறலை உறுதி செய்க
## நீர்கொழும்பு சிறை வன்முறை தொடர்பில் ஐ.நா வலியுறுத்து



(ஜெனிவா)

நீர்கொழும்பு சிறை வன்முறை தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்யுமாறு ஐ.நா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் நீர்கொழும்பு சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற பாரதூர 16ஆம் பக்கம் பார்க்க

## சுயாதீனமான விசாரணை நடத்தப்பட வேண்டும்
### சிறை வன்முறை தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை

AMNESTY INTERNATIONAL

(கொழும்பு)

கடந்த வாரம் நீர்கொழும்புச் சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறையைத் தொடர்ந்து, நீர்கொழும்புச் சிறைச்சாலையிலிருந்து மாற்றப்பட்ட இரண்டு கைதிகளின் மரணங்கள் குறித்து அவசர மற்றும் சுயாதீனமான 04ஆம் பக்கம் பார்க்க

## யாழில் இளைஞனை கடத்தி சித்திரவதை
### கூரிய ஆயுதங்களுடன் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இளைஞன் ஒருவரை கடத்தி சித்திரவதைக்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய ஐவர் கூரிய ஆயுதங்களுடன் யாழ்.மாவட்ட 15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் ரயில் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புகையிரதம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அருகில் உள்ள தொடருந்து கடவையில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொழும்புத்துறையை 04ஆம் பக்கம் பார்க்க

# நீதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை
### எதிர்க்கட்சிகள் தீர்மானம்



நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரம் தொடர்பில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வர எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் குழு நேற்று தீர்மானித்துள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கில் காணிகளை விடுவிக்கக் கோரிப் போராட்டம்



16ஆம் பக்கம் பார்க்க

### வாசனை சவர்க்காரத்துக்குள்
## ஹெரோயின் கடத்தல்
### யாழில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

வாசனை சவர்க்காரத்திற்குள் நூதனமான முறையில் போதைப் பொருளை கடத்தி யாழ்ப்பாணத்தின் நகர்ப் பகுதியில் விற்பனைக்காக கொண்டு சென்ற ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் (9) இடம்பெற் 15ஆம் பக்கம் பார்க்க

### யாழில் யாசகம் செய்த
## 30 வெளி மாவட்டத்தவர்கள் பொலிஸாரால் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் சுற்றுச்சூழலுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் விதமாகவும் சுற்றுலாவிகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் வகையிலும் நடமாடிய 30 இற்கும் அதிகமான யாசகர்கள் நேற்று யாழ்.பொலிஸாரின் பங்களிப்புடன் வெளியேற்றப்பட்டுள்ளதாக வடமாகாண சுற்றுலாத்துறைதலைவர்மருத்துவர் 15ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் நிதி பேரிடருக்கு பயன்படுத்தவில்லை
### பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, பேரிடர் நிவாரணப் 04ஆம் பக்கம் பார்க்க

## யாழில் போலி நாணயங்களுடன் கைதானவருக்கு 6 வருட சிறை
### யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 21 இலட்ச ரூபாய் போலி நாணயத்தாள்கள் மற்றும் அதனை அச்சிடப் பயன்படுத்திய உபகரணங்கள் என்பவற்றுடன் கைதான நபருக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்று 06 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி சதீஸ்கரனால் குறித்த தீர்ப்பு 15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




அம்பாள் அடியார்களே!
எமது தேவஸ்தானத்தின் புதிய பிரமாண்டமான அன்ன சத்திர மண்டபம் அம்பாள் திருவருளால் பணிகள் பூர்த்தியாகி திறப்புவிழா காண திருவருள் கைகூடியுள்ளது.

தலைவர் :– செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்

| காலம் | நேரம் | இடம் |
|---|---|---|
| 12.07.2026 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை |



சிறப்புரை:
செந்தமிழ்ச்சுடர் திரு.கி.சிவகுமார்
(விரிவுரையாளர் - வேல்ஸ் பல்கலைக்கழகம் சென்னை)

கலை நிகழ்ச்சிகள் சிறப்பு அன்னதானம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(C-6008)

## இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் மற்றும் மானிப்பாய் பரிஸ் லியோ கழகத்தின் ஏற்பாட்டில் 2026 ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 12 மணிவரை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-7)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 05 . 1940

மறைவு 22 . 06 . 2025

### அமரர் சின்னப்பு பாலசிங்கம்

திதி : கிருஷ்ணபட்ச துவாதசி

உங்கள் கனவுகளை அழித்து
எங்கள் கனவுகளுக்காய் உழைத்து
எம்மை உயர்த்திய அன்புத் தந்தையே!
எம் நெஞ்சக் கோவிலில் என்றும்
நீங்கள் நிலையாய் இருப்பீர்கள் – அப்பா
உங்கள் ஆத்மா சாந்தி பெறட்டும்

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(8012)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மகன்கள், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



மலர்வு 19.12.1936

உதிர்வு 07.07.2026

## திருமதி பாலசிங்கம் மகேஸ்வரி

மாலியவத்தை சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் மகேஸ்வரி அவர்கள் கடந்த (07.07.2026) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - தில்லையம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் சங்கரத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பொன்னையா பாலசிங்கம் (இளைப்பாறிய குடிவரவு, குடியகல்வு அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி (இளைப்பாறிய உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி), சண்முகசுந்தரம் (கணக்காளர், அமெரிக்கா), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் கமலாதேவி (Civil Service, லண்டன்), சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தங்கமலர், Dr.சரோஜாதேவி (அமெரிக்கா), ராஜேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற Eng.ஸ்ரீவிக்னராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவகுமாரன் (லண்டன்), நந்தகுமாரன் (Canada Post), ஸ்கந்தகுமாரன் (Fund Accountant Canada), சூரியகுமாரன் (லண்டன்), கலாநிதி சியாமளா (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr.சந்திரிகா (லண்டன்), தயாளினி (Dental Assistant, Canada), கல்யாணி (கனடா), கணணா (லண்டன்), Eng.ஜெயக்குமார் (விரிவுரையாளர் - யாழ்.உயர் தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆரபி, பைரவி, ஆரன், பிரிஷா, பவிக்கா, திவாஷா மற்றும் திவிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கலாவதி, கௌரி, காயத்திரி, கல்யாணி, கௌசல்யா, நிலா, கண்ணன், நளினா ஆகியோரின் பாசமிகு அத்தையும் புஷ்பா, அகிலா, சிவநீலன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.07.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாலியவத்தை,
சங்கானை.


(2500)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முல்லை கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியை உடன் தடுத்து நிறுத்துக

## ரவிகரகன் எம்.பி கோரிக்கை



(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவுக் கடற்பரப்பில் அதிகரித்துள்ள சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் வலியுறுத்தியுள்ளார்.**

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சிற்குரிய அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

குறித்த கலந்துரையாடல் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு கடற்பரப்பில் அண்மைய நாட்களாக வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை, டைனமைட் வெடி வைத்து மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்னிடம் முறையிட்டிருந்தனர்.

இத்தகைய சூழலில் உடனடியாக பாராளுமன்றில் கடற்றொழில் அமைச்சருக்குரிய அலுவலகத்திற்குச் சென்று கடற்றொழில் அமைச்சர் மற்றும் கடற்றொழில் பிரதி அமைச்சர் ஆகியோரிடம் குறித்த சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக எடுத்துக்கூறியிருந்தேன்.

இந்நிலையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளை நிறுத்துமாறு தாமும் தொடர்ந்து கூறிவருவதாகவும், அவ்வாறான சட்டவிரோத சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் தம்மால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கடற்றொழில் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் முல்லைத்தீவு கடற்பரப்பில் அதிகரித்துள்ள சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடற்படையினருக்கும், துறைசார் திணைக்கள அதிகாரிகளுக்கும் உடனடியாகவே கடற்றொழில் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோரால் உத்தரவிடப்பட்டிருந்தது என அவர் சுட்டிக்காட்டினார். (க-8)

## இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

**இமையாணன் மத்தியின் மகுடம் கிண்ணத்திற்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் நிறைவு நாள் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.**


இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தலைவர் ப.யசிந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக KPL Complex உரிமையாளரும் முதன்மை அனுசரணையாளருமான ந.இலட்சுமி காந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (8-90)

# திறைசேரி டொலர் மாயம்;

## பாராளுமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு


திறைசேரியிலிருந்து மூன்றாம் தரப்பு ஒன்றுக்கு 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மாற்றப்பட்ட சம்பவம் தொடர்பான, அரச நிதி குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.அரச நிதி பற்றிய பாராளுமன்ற குழுவின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

இதன்போது, திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மூன்றாம் தரப்பினருக்கு மாற்றப்பட்ட சம்பவம், சைபர் குற்றத்துடன் தொடர்புடைய மோசடி என அரச நிதி பற்றிய குழு கண்டறிந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.




அத்துடன், குறித்த அறிக்கையில், ஒட்டுமொத்த வெளிநாட்டு கடன் மீள் செலுத்தல் செயல்முறை குறித்து, தேசிய கணக்காய்வு அலுவலகம் உடனடியாக கணக்காய்வு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனவும் இந்த மோசடி விவகாரத்தில் குற்றவியல் சட்டத்தின் கீழ் தேவையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது சட்டமா அதிபரின் பொறுப்பு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க-8)

## புதுக்குடியிருப்பில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுப்பு



(நெளுங்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் டெங்கு ஒழிப்பு மற்றும் பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையை குறைப்பதை நோக்கமாக கொண்டு மாபெரும் சிரமதானம் மற்றும் விழிப்புணர்வு வேலைத் திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பிரதான வாயிலில் இருந்து ஆரம்பமான இந்நிகழ்வு, புதுக்குடியிருப்பு நகரம் வரை முன்னெடுக்கப்பட்டதுடன், பொதுமக்கள் மத்தியில் டெங்கு பரவலைத் தடுப்பதன் அவசியம் மற்றும் பிளாஸ்ரிக், பொலித்தீன் பயன்பாட்டை குறைப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் புதுக்குடியிருப்பு பிரிவு, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மற்றும் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன இணைந்து ஒழுங்குபடுத்தியிருந்தன.

நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார பரிசோதகர்கள், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், சுகாதாரப் பிரிவினர் இணைந்து சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்தல் மற்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-299)

## நெல் கொள்முதல் திங்கள் முதல் ஆரம்பம்



(கொழும்பு)

நெல் கொள்முதல் நடவடிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (13) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, நாடு தழுவிய ரீதியில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை அரச கொள்முதல் நிலையங்கள் ஊடாக கொள்வனவு செய்வதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

## புதுக்குடியிருப்பு வர்த்தகர்களின் நினைவேந்தல் நிகழ்வு



(நெளுங்குளம)

கடந்த காலங்களில் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்திற்குட்பட்ட பகுதியில் உயிரிழந்த வர்த்தகர்களின் நினைவேந்தல் நிகழ்வு புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு வரத்தக சங்க தலைவர் செல்லையா மோகன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் , சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சி.குகநேசன், வர்த்தகர்களின் குடும்பத்தினர்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், வர்த்தகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். (8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எம்பாப்வே மிரட்டல்!

## மொராக்கோவை வீழ்த்தி

### அரையிறுதிக்கு நுழைந்தது பிரான்ஸ்



உலகக் கிண்ண கால்பந்து சம்பியன்ஷிப் தொடரின் காலிறுதிப் போட்டியில், மொராக்கோவை 2 - 0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பிரான்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

போஸ்பரோவில் உள்ள பொஸ்டன் விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்த தீர்மானம் மிக்க போட்டியில் தோல்வியடைந்த மொராக்கோ அணி, தொடரிலிருந்து வெளியேறியுள்ளது.

போட்டியின் 27 ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது.

இதில் பிரான்சின் நட்சத்திர வீரர் கிலியன் எம்பாப்பே அந்த வாய்ப்பைப் பயன்படுத்தத் தவறினார். இதனால், முதல் பாதி ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் கோல் எதையும் பதிவு செய்யவில்லை.

ஆட்டத்தின் 60 ஆவது நிமிடத்தில் கிலியன் எம்பாப்பே பிரான்ஸ் அணிக்காக முதல் கோலைப் பதிவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து 66 ஆவது நிமிடத்தில், மற்றுமொரு நட்சத்திர வீரர் உஸ்மான் டெம்பலே, மொராக்கோவின் கோல் காப்பாளரை நிலைகுலைய வைத்து அணியின் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார்.

இந்த வெற்றியின் மூலம் பிரான்ஸ் அணி, தொடரின் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. (3)

## தேர்தல்...

பணிகளுக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று (10) பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைப்பதற்கும் கொடையாளர்களினால் வழங்கப்பட்டுள்ள அனைத்து நிதியுதவிகளும் தற்போது திறைசேரியின் பிரதிச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் உள்ள சிறப்பு கணக்கு ஒன்றில் பாதுகாப்பாக வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிதியானது தேசிய முன்னுரிமைகள் மற்றும் தேவைகளைக் கருத்திற்கொண்டு அடையாளம் காணப்படும் திட்டங்களுக்காக, வெளிப்படைத்தன்மையுடனும் செயற்திறனுடனும் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அதற்கமைய, இந்தத் திட்டங்கள் முக்கியமாகப் பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், அவர்களது வாழ்வாதாரத்தை மீட்டெடுத்தல் மற்றும் சேதமடைந்த பொது உட்கட்டமைப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகளை மீண்டும் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தியுள்ளதாகக் குறிப்பிட்ட பிரதமர், இந்த அனைத்து நிதிகளின் நிர்வாகமும் பயன்பாடும் மிக உயர்ந்த வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சிக் கொள்கைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். (ம-7)

## சுயாதீனமான...

விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியாவுக்கான பிரதிப் பிராந்திய பணிப்பாளர் பாபு ராம் பந்த், இந்த மரணங்கள் குறித்த தகவல்களும் இடமாற்றம் செய்யப்பட்ட கைதிகள் சித்திரவதை மற்றும் ஏனைய மோசமான நடத்தைகளுக்கு ஆளாக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளும் ஆழ்ந்த கவலையளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

குறித்த கைதிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கு உள்ளது என்று குறிப்பிட்டுள்ள அவர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து மரணங்கள் குறித்தும் உடனடி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

கைதிகளைச் சந்திக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முழுமையான அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், சட்டத்தரணிகள் தங்களது சேவை பெறுநர்களை சந்திக்க அனுமதிக்கப்பட வேண்டும். குடும்ப உறுப்பினர்களுக்குப் பார்வையிட அனுமதி வழங்கப்பட வேண்டும் மற்றும் மருத்துவ சிகிச்சை தேவைப்படும் கைதிகளுக்குத் தாமதமின்றி சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. (ம-7)

## யாழில்...

சேர்ந்த 42 வயதான தங்கவடிவேலு பிரபாகரன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் புற்றுநோய் வியாதியால் பாதிக்கப்பட்டு நீண்டகால சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் நோயின் வீரியம் தாங்க முடியாமல் யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு அருகில் உள்ள தொடருந்து கடவைக்கு சென்று, அநுராதபுரத்தில் இருந்து வந்த யாழ். ராணி தொடருந்தின் முன்பாய்ந்து உயிர்மாய்த்துள்ளார்.

பின்னர் அவரது சடலமானது யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்திற்கு தொடருந்தில் எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7)


# வீட்டுக் கிருத்திய அழைப்பு



அமரர் திருமதி

## நிர்மலாதேவி சுந்தரமூர்த்தி

கடந்த 08.06.2026 ஆம் திகதியன்று இயற்கையெய்திய கஜட்டை, ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திரு. சண்முகம் சச்சிதானந்தசிவம், அமரர் திருமதி. பராசக்தி சச்சிதானந்தசிவம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், அமரர் திரு கணபதிப்பிள்ளை விசுவலிங்கம், அமரர் திருமதி. சின்னம்மா விசுவலிங்கம் ஆகியோரின் மருமகளும், திரு. விசுவலிங்கம் சுந்தரமூர்த்தி அவர்களின் மனைவியும், திரு சுந்தரமூர்த்தி கபிலன், திரு. சுந்தரமூர்த்தி தசாங்கன் ஆகியோரின் தாயாரும், திருமதி. தர்ஷிகா கபிலன், திருமதி. நிசாந்தினி தசாங்கன் ஆகியோரின் மாமியும், செல்வி. பிரமாத்மிகா கபிலன், செல்வி. விஸ்வாத்மிகா கபிலன், செல்வன். அதிதீரன் தசாங்கன் ஆகியோரின் பேர்த்தியும், திருமதி. சத்தியபாமா பாலகுமார், திரு. சச்சிதானந்தசிவம் சிறிதரன், திருமதி. சுலோசனாதேவி சசீதரன் ஆகியோரின் சகோதரியும், திருமதி. மங்கையற்கரசி செல்வநாயகம், அமரர் திரு.விசுவலிங்கம் சத்தியமூர்த்தி, திரு.சண்முகசுந்தரம் பாலகுமார், திருமதி புவனேஸ்வரி சிறிதரன், திரு சிவராசா சசீதரன் ஆகியோரின் மைத்துனியும், திருமதி. பகுரூபா ரவிவர்மன், திருமிகு. ஜெயரூபா பரமகுரு, திருமதி சிவரூபா ரமேஸ் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், திரு.செல்வநாயகம் ஞானசொரூபன், திரு. செல்வநாயகம் ஜங்கரன், திருமிகு. லோகேஸ்வரி செல்வநாயகம், திரு. உமாசுதன் செல்வநாயகம் ஆகியோரின் மாமியுமாகிய அமரர் திருமதி. நிர்மலாதேவி சுந்தரமூர்த்தி அவர்களது வீட்டுக்கிருத்திய நிகழ்வு 12.07.2026 (ஞாயிறு) அன்று அவரது இல்லத்தில் காலை 08.00 மணிக்குப் பிரார்த்தனையோடு ஆரம்பமாகி மதியம் 11.00 மணிமுதல் மதிய உணவுபசாரமும் அன்னாரது வீட்டில் இடம்பெறவுள்ளது.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

சிவசக்திவாசம்,
ஏழாலை மேற்கு, ஏழாலை.

(C-6012)

தகவல்:
குடும்பத்தினர்



# பகிரங்க ஏல அறிவித்தல்

பருத்தித்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான பின்வரும் சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகளைப் பகிரங்க ஏலம் மூலம் 01.08.2026 - 31.12.2026 ஆம் திகதி வரையான 5மாத காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக 2026.07.20ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ள ஏலத்தில் ஆர்வமுள்ளவர்கள் தங்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

| சந்தை விபரம் | பகிரங்க ஆரம்ப ஏலத் தொகை 01.08.2026 |
|---|---|
| மானான்டி பொதுச் சந்தை | 57600.00 |
| மானாண்டி மாட்டிறைச்சிக்கடை | 574500.00 |
| மானாண்டி கோழி இறைச்சிக்கடை | 35250.00 |
| புனித நகர் சந்தை | 4620.00 |
| கற்கோவளம் சந்தை | 10710.00 |
| சந்தா தோட்டம் பொதுச் சந்தை | 72500.00 |
| மருதங்கேணி பொதுச் சந்தை | 40420.00 |
| மருதங்கேணி கோழி இறைச்சிக்கடை | 120400.00 |

ஏலத்தின்போது குத்தகைக்குப்பெற்றுக்கொண்ட குத்தகையாளர் குத்தகைக்கேள்வித்தொகையை சபையால் குறித்துரைக்கப்படும் திகதிக்குள் செலுத்தி குத்தகை ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உதயகுமார் யுகதீஸ்
தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேச சபை

(C-6011)

11.07.2026


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒட்டிப் பிறந்த இரட்டையரை பிரித்து மருத்துவர்கள் சாதனை

**(கொழும்பு)**

**ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை அறுவை சிகிச்சை மூலம் பிரித்தெடுத்து வரலாற்றுச் சாதனை படைத்திருக்கிறார்கள் இலங்கை மருத்துவர்கள்.**

பெரதெனிய போதனா மருத்துவமனையின், சிறிமாவோ பண்டாரநாயக்க சிறப்பு குழந்தைகள் மருத்துவமனை மருத்துவர்கள் குழு மற்றும் பெரதெனிய பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் குழு, ஜூன் 10 அன்று மிகவும் சிக்கலான அறுவை சிகிச்சையை மேற்கொண்டனர்.

இதன்போது, ஒட்டிப்பிறந்த இரட்டையர்களான லினுலி தருல்யா மற்றும் லித்துலி மனுல்யாவை வெற்றிகரமாக, அவர்கள் பிரித்தனர்.

மாவனெல்ல, அரநாயக்கவில் 2021 இல் பிறந்த இந்த இரட்டையர்கள், ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக மருத்துவ நிபுணர்களின் நெருங்கிய கண்காணிப்பில் இருந்து வந்தனர்.



இந்தக் காலகட்டத்தில், மருத்துவக் குழுக்கள் இறுதிப் பிரிப்பு அறுவை சிகிச்சையை மேற்கொள்வதற்கு முன்பு, விரிவான ஆய்வுகள், திட்டமிடல் மற்றும் பல நடைமுறைகளை மேற்கொண்டன.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மிகவும் சிக்கலான குழந்தை மருத்துவ நடைமுறைகளில் ஒன்றாகக் கருதப்படும் இந்த அறுவை சிகிச்சையின் விளைவாக, அந்த இரட்டையர்கள் இரண்டு தனித்தனி குழந்தைகளாக வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டனர்.

இந்தச் சாதனை, இலங்கை மருத்துவ நிபுணர்களின் திறமை, அர்ப்பணிப்பு மற்றும் நிபுணத்துவத்திற்காக பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. (க-8)

## நடப்பாண்டில் இதுவரை 1.2 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டில் இதுவரை இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 1.2 மில்லியனை எட்டியுள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் ருவன் ரணசிங்க தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இக்கருத்துக்களை வெளியிட்டார்.

இக்காலப் பகுதியில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளால் 1.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான அந்நியச் செலாவணி வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நாட்டின் சுற்றுலாத் துறையில் தொடர்ந்து காணப்படும் சாதகமான வளர்ச்சியின் மூலம், 2026 ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இலக்கை இலங்கை வெற்றிகரமாக அடையும் என்றும் இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். (8)

## விசேட சுற்றிவளைப்பு 592 பேர் கைது!

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட குற்றத்தடுப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு விசேட சோதனை நடவடிக்கைக்கு அமைய பல்வேறு குற்றச்செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 23 முக்கிய சந்தேகநபர்கள் உட்பட 592 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது, 26,233 நபர்கள் பொலிஸாரால் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போது, குற்றச் செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட 23 சந்தேகநபர்கள் உட்பட 592 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (8)

## சிறுதானியங்களை உட்கொள்வதன் மூலம் தொற்றா நோயிலிருந்து பாதுகாக்கலாம்

**கிளி.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு**



(தருமபுரம்)

சிறுதானிய உணவுகளை உட்கொள்வதன் மூலம் தொற்றா நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் வி.சோதிலட்சுமி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி புளியம்பொக்கணை கமநலசேவை பிரிவிற்குட்பட்ட தருமபுரம் பகுதியில் "இறுங்கு அறுவடை விழா" நேற்றைய தினம் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், தற்போதைய காலத்தின் தேவையாக சிறுதானிய செய்கையை ஊக்குவிப்பதுடன் சிறுதானிய உணவுகளை உட்கொள்வதன் மூலம் தொற்றா நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளவும் குறைந்த செலவில் கூடிய இலாபத்தை பெறக் கூடிய சிறுதானியப் பயிர்ச்செய்கை அனைவரும் முன்வந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார். விவசாயிகள் பலர் தாமாகவே முன்வந்து சிறுதானிய செய்கையிலே முன்னெடுத்துச் செல்ல விரும்புவதாகவும் தெரிவித்தனர்.

சிறுதானிய செய்கையாளருக்காக ஊக்குவிப்பு தொகையாக 15 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்படுவதுடன் சிறுதானிய செய்கைக்கான உள்ளீடுகளும் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் விவசாய திணைக்களத்தின் பாடவிதான உத்தியோகத்தர் மற்றும் விவசாய போதனாசிரியர்கள் விவசாயிகள் செய்கையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (த-316)


# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்

தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி 2026/27

**காலம்**

நான்கு வருடங்கள்

**அனுமதித் தகைமைகள்**

அ) அனைத்து விண்ணப்பதாரிகளும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
அத்துடன்,

ஆ) க.பொ.த உயர் தரத்தில் தமிழ் உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது

இ) க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தில் குறைந்த பட்சம் "B" தரத்துடன் க.பொ.த உயர்தரத்தில் தமிழ்மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றி குறைந்த பட்சம் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது

ஈ) தேசிய கல்வியற் கல்லூரியில் தமிழ்மொழி கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.
அல்லது

உ) இலங்கை திறந்த பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் இணையான உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**யாருக்காக**

- தமிழ் மொழியை முதன் மொழியாக / தாய்மொழியாக /இரண்டாம் மொழியாகக் கற்பிக்க விரும்புவோர்.
- அரச / தனியார் பாடசாலைகளில் ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்நிலைப் பிரிவுகளில் பணிபுரியும் ஆசிரியர்கள்.
- தமிழ்மொழி கற்பித்தலில் அனுபவம் மிக்க தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்திருப்போர்
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் மற்றும் தமிழ்மொழிக் கற்பித்தலில் சிறப்புக் கலைமாணிப் பட்டம் ஒன்றினைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள்.
- தொழில் தகைமையுடன் கூடிய சிறப்புப் பட்டக் கற்கையை பூர்த்தி செய்ய விரும்புபவர்கள்.

தொடர்புகளுக்கு :
யாழ்ப்பாணப் பிராந்தியநிலையம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

021 222 3374
www.ou.ac.lk

பதிவாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவம் வவுனியாவில் முன்னெடுப்பு

**(தருமபுரம்) ----------------------- கொரிய அரசாங்கம் மற்றும், "கொய்க்கா" அமைப்பின் நிதியுதவியுடன் "ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவத் திட்டம்" வவுனியா மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சாம்ப சிவம் சுதர்சன் தெரிவித்தார்.**

வவுனியா பம்பைமடுப் பகுதியில் அமையவுள்ள இத் திட்டம் தொடர்பாக, "கொய்க்கா" அமைப்பின் அனுசரணையுடன் தென் கொரியாவைச் சேர்ந்த "கெயில்" பொறியியல் நிறுவனம் மற்றும் "கயட்" பொறியியல் நிறுவனம் ஆகிய வற்றைச் சேர்ந்த நிபுணர் குழுவினர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை வவுனியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தனர். இக்குழுவினர் வவுனியா பல்கலைக்கழகத் துணை வேந்தர் மற்றும் அப் பல் கலைக்கழகத்தின் சுற்றுச் சூழல், கழிவு முகாமைத்துவம் தொடர்பான துறைசார் நிபுணர்களுடன் விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இத்திட்டத்துக்கான முதற் கட்டப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. தரவு சேகரிப்பு, முதன்மைத் திட்ட உருவாக்கம் மற்றும் செயற்திட்ட உருவாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய முதல் கட்டப் பணிகள் அடுத்த ஆண்டின் நடுப் பகுதிக்குள் நிறைவு செய்யப் படவுள்ளன. அதன் பின்னர், கட்டுமானப் பணிகள் மற்றும் இயந்திரங்களைப் பொருத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம், வவுனியா மாவட்டத்தில் எதிர்காலத்தில் ஏற்படும் கழிவு முகாமைத்துவப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை எட்ட முடியும். அத்துடன், வவுனியாவில் அமையவுள்ள இந்த ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் ஊடாக, எதிர்காலத்தில் ஒட்டு மொத்த வடக்கு மாகாணத்திலும் ஒரு சீரான மற்றும் ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவக் கட்டமைப்பை வெற்றிகரமாக நடை முறைப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுவதாக உள்ளூராட்சி ஆணையாளர் குறிப்பிட்டார். (8-316)



# தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் புதிய அன்னசத்திர மண்டபம் திறப்பு விழா நாளை

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் புதிய அன்னசத்திர மண்டபம் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தில் நடைபெறவுள்ளது. தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சென்னை வேல்ஸ் பல் கலைக்கழக விரிவுரையாளர் செந்தமிழ்ச்சுடர் கி.சிவகுமார் சிறப்புரை ஆற்றவுள்ளதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (8)

# மன அமைதிக்கான உயிரோவியங்கள் சிற்ப ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழ்க்கலைஞர் ஒன்றியமும் நித்திலம் கலையகமும் இணைந்து நடத்தும் "சிற்ப ஓவியக் கண்காட்சி" எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 01.30 மணிக்கு யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸ், சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன அமைதிக்கான உயிரோவியங்கள் எனும் தலைப்பில் காட்சிப்படுத்தப்படும் இக் கண்காட்சியில் ஆக்கங்களைக் காட்சிப்படுத்த விரும்புவோர் 077 7450 728 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் காட்சிப்படுத்தப்படும் அனைத்து ஓவியங்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (8)

# "யாழ்.மாவட்டச் செயலக மடல்" அரசாங்க அதிபரால் கையளிப்பு!



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள், ஜனாதிபதி மற்றும் கௌரவ அமைச்சர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை உள்ளடக்கி தொகுக்கப்பட்ட "யாழ்ப்பாண மாவட்டச் செயலக மடல்" நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனால் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், அமைச்சர் பேராசிரியர் ஏ. எச். எம். எச். அபயரட்ணவிடம் அமைச்சில் வைத்து கையளிக்கப்பட்டது. மேலும், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் பி. ருவன் சேனாரத் மற்றும் அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக பண்டார ஆகியோரிடமும் யாழ்ப்பாண மாவட்டச் செயலக மடலின் பிரதிகள் அரசாங்க அதிபரால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# நூல் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

கலாநிதி ஞானசேகரன் செல்லையாவின் "கல்வி புத்தாக்கம் தலைமைத்து வம்" எனும் நூல் வெளியீடு எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு பருத்தித்துறை வீதி கட்டப்பிராய் சந்தியில் அமைந்துள்ள Kee rty's Creative Palette இல் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் கலந்து கொள்ளவுள்ளார் (8)

# எண்ணெய் விலையில் வீழ்ச்சி



(கொழும்பு)

சர்வதேச சந்தையில் எண்ணெய் வகைகளின் விலை நேற்று சற்று வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

அதற்கமைய, ப்ரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை இரண்டு சதவீதத்தினால் குறைவடைந்து 76 அமெரிக்க டொலர்களாக விற்பனை செய்யப்படுகிறது.

அதேநேரம், நேற்று முன்தினம் 74 டொலர்களாக இருந்த WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்று 72 அமெரிக்க டொலர்களாக விற்பனை செய்யப்பட்டது.

அத்துடன், சர்வதேச சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 3 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது. (8)

# 'நீதம்' சட்ட இதழ் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சட்டத்துறை மற்றும் யாழ் பல்கலைக் கழக சட்ட மாணவர் சங்கம் இணைந்து முன்னெடுக்கும் நீதம் சட்ட இதழின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் உயர்நீதிமன்ற நீதியரசர் சம்பத் அபயகோன் பிரதம விருந்தினராகவும், மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் கௌரவ விருந்தினராகவும்; சிறப்பு விருந் தினராக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதி மன்றாடியார் நாயகம் சுஹர்ஷி ஹேரத்தும்,கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக் கழக சட்டத்துறை மாணவர்களால் ஒவ்வொரு ஆண்டும் நீதம் இதழ் வெளியிடப்பட்டு வருவதுடன் இம்முறை பத்தாவது இதழ் வெளியிடப்படவுள்ளது . (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுவாப் பட்டை விலை உயர்வு!



(கொழும்பு)

இலங்கையில் கறுவாப்பட்டையின் விலை வரலாறு காணாத அளவுக்கு சடுதியாக அதிகரித்துள்ளதென கறுவா அபிவிருத்தி திணைக்களம் தெரி வித்துள்ளது.

அதன்படி, தற்போது ஒரு கிலோ கிராம் கறுவாப்பட்டை 5,000 முதல் 5,500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.

கறுவாப்பட்டைக்கான அதிக கேள்வி மற்றும் இலங்கை ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவையே இந்த விலை அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. (8)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூர் நவக்கிரிப் பகுதியில் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு**

நிலாவரைக்கிணறு முன்பக்க வீதியில்- எல்லாளன் வாசிகசாலைக்கு அருகில்

+ நன்னீர் ஊற்றுச் சூழல்
+ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
+ வீடு கட்டுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் உகந்த நிலம்

**விலை பேசித் தீர்மானிக்கப்படும்**

**தொடர்புகளுக்கு-021 222 2639**

தலைவர்,
யாழ் மாவட்ட கூட்டுறவுக்கிராமிய வங்கிகளின் சமாசம் வ.து
இல.95, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-6006)


போதைப் பொருட்களுடன்

### 933 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்துக் கமைய நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாத்திரம் 933 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் சுமார் 925 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார், 933 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். (8)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28 . 10 . 1950

மறைவு
22 . 06 . 2025

அமரர். **சின்னத்தம்பி ரகுலேந்திரன்** (ஸ்ரலின்)
(ஓய்வு நிலை சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)

எங்கள் ஐயனே!
வருவீர் என காத்திருக்க
வல்ல விதி விடவில்லை
ஆண்டொன்றாகிப் போனதுவோ
நீர் எமை விட்டேகி-ஆனாலும்
தடம் பதித்த உம் நினைவுகளை மட்டும்
கணப்பொழுதேனும் கலைக்க முடியவில்லை
காலமுள்ள வரை எம் இதயமதில் நாதமாய்
இசை மீட்டி உயிர் வாழ்வீர் ஐயனே!
உம் ஆத்மா சாந்திக்காக
இறைபாதம் இறைஞ்சுகின்றோம்.

(8008)

34/3 A புகையிரத நிலைய வீதி,
1 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

மனைவி,
குடும்பத்தினர்



# ST.JOHN'S COLLEGE, JAFFNA

## VACANCIES

Applications are hereby invited from qualified persons for the following vacancies:

**Basic requirements:**

- Having passed the G.C.E. Ordinary Level Examination in six (06) subjects with at least three (03) Credit passes, including English, Tamil, and Mathematics.

**AND**

- Having passed the G.C.E. Advanced Level Examination in any stream.

➢ **Management Assistant – General Administration**

**Specific requirements:**

- A professional qualification in Human Resource Management, or completion or current pursuit of a Diploma in Human Resource Management or an equivalent qualification from a recognized institution.
- A minimum of three (03) years of experience in human resources, administration, payroll management, or a related field.
- Proficiency in MS Office applications is essential. Knowledge of HRIS and Payroll Systems will be an added advantage.

***Salary: Negotiable***

➢ **Management Assistant – Secretary**

**Specific requirements:**

- Having completed a Secretarial Course from a recognized institution or is pursuing a professional qualification leading to Chartered Secretary status.
- Minimum of three (03) years experience in secretarial, administrative, or office management functions.
- Excellent communication skills in English are essential. Proficiency in Sinhala will be an added advantage.

***Salary: Negotiable***

➢ **Management Assistant – Finance**

**Specific requirements:**

- Having successfully completed the AAT qualification or an equivalent accounting qualification from a recognized institution.
- Minimum of three (03) years experience in accounting, finance, bookkeeping, or related administrative functions.
- Proficiency in QuickBooks and or MS Office applications is an added advantage.

***Salary: Negotiable***

Send your complete CV with the contact details of two non-related referees, along with the photocopies of relevant educational and professional certificates, by registered post to the address given below, before 20th July 2026.

Please indicate the position applied for, on the top lefthand corner of the envelope.

***(Only shortlisted candidates will be called for an interview)***

**The Principal,
St. John's College,
Jaffna.**

(C-6009)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நேட்டோ தலைவர்களுக்கு வழங்கப்பட்ட
# துருக்கி ஜனாதிபதியின்
## விசித்திர நினைவுப் பரிசு



(அல்ஹாரா)

நேட்டோ உச்சி மாநாட்டில் பங்கேற்ற உலகத் தலைவர்களுக்கு துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் வழங்கிய நினைவுப்பரிசு சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

வழக்கமான நினைவு பரிசில்களுக்கு பதிலாக, பாவனையில் உள்ள பழமையான ரிவால்வர் துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் அடங்கிய பரிசுப் பெட்டியை அவர் வழங்கியுள்ளார்.

துருக்கியின் பாதுகாப்புத் துறையின் திறனை உலகிற்கு எடுத்துக்காட்டும் நோக்கில் இந்தப் பரிசு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு தலைவருக்கும் அவர்களது பெயர் பொறிக்கப்பட்ட, 1990 களில் துருக்கியின் MKE நிறுவனம் தயாரித்த அரிய "Gumusay .357 Magnum" ரிவால்வர் மரப்பெட்டியில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

அந்தப் பெட்டியில் துருக்கி தேசியக் கொடி, நேட்டோ சின்னம் மற்றும் "எங்கள் நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் ரிவால்வர் வகை கைத்துப்பாக்கி" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசு பல நாடுகளின் தலைவர்களிடையே சுவாரஸ்யமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

உலகளவில் துப்பாக்கி ஏற்றுமதியில் அமெரிக்கா, இத்தாலிக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் உள்ள துருக்கி, தனது ஆயுத உற்பத்தித் திறனை வெளிப்படுத்தும் விதமாக இந்த வித்தியாசமான நினைவுப்பரிசை வழங்கியிருப்பது சர்வதேச அரசியல் வட்டாரங்களில் பரவலாக பேசப்படுகிறது. (3)

# முழு வீச்சி
# ஈரானை தா



## இஸ்ரே

(ஜெருசலேம்)


ஈரானுக்கு எதிராக
மீண்டும் தொடங்க
"முன்னெப்போதைய
தயார் என்றும் இ
இஸ்ரேல் காட்ஸ் தெ

ஏப்ரல் மாத போர் நிறுத்தம் மற்றும் ஜூன் மாதத்தில் அமெரிக்க-ஈரான் இடையே பகைமைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஒப்பந்தத்திற்கு பிறகு, மீண்டும் ஒரு முழு அளவிலான போர் ஏற்படுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தும் வகையில், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே புதிய மோதல்கள் வெடித்துள்ள நிலையில் இந்த சமீபத்திய கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் தெரிவிக்கையில், "ஈரானில் வான் மேலாதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டவும், தாக்குதல் நடத்தி அச்சுறுத்தல்களை அகற்றவும், தேவைப்பட்டால் மூன்றாவது முறையாகவும் கூட, சண்டையை மீண்டும் தொடங்குவதற்கு இராணுவம் தயாராகவும் எச்சரிக்கையாகவும் உள்ளது.

நாம் யுத்தத்திற்கு திரும்பிச் செல்ல

## எல்லை மீறிய அமெரிக்கா
# ஈரானின் அணுமின் நிலையம்
# மீது சரமாரி தாக்குதல்



(டெஹ்ரான்)

ஈரானில் அணுமின் நிலையம் அருகே அமெரிக்கா குண்டுவீசி தாக்குதல் நடத்தியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் சீர்குலைந்த நிலையில் மூன்றாவது நாளாக ஈரான் - அமெரிக்கா இடையே மோதல் நடந்து வருகிறது.

நேற்று முன்தினம் தெற்கு ஈரானின் பந்தர் அப்பாஸ், சபாஹர் உள்ளிட்ட துறைமுக நகரங்கள் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தியது.

பதிலுக்கு பஹ்ரைன், குவைத்தில் உள்ள அமெரிக்க படைத்தளங்களை குறிவைத்து தாங்கள் தாக்கியதாக ஈரான் தெரிவித்தது. தங்கள் நாட்டை நோக்கி வந்த ட்ரோன், ஏவுகணைகளை இடைமறித்து தாக்கி அழித்துள்ளதாக குவைத், பஹ்ரைன் நாடுகளும் தெரிவித்துள்ளன.

இந்த சூழலில் ஈரானின் மிக முக்கிய புஷெஹர் அணுமின் நிலையத்தின் மிக அருகாமையில் அமெரிக்கப் படைகள் குண்டுவீசியுள்ளன.

ஈரான் அரசு ஊடகங்களின்படி, இந்த தாக்குதலின் போது புஷெஹர் அணுமின் நிலைய வளாகத்திற்குள் இருக்கும் ஒரு கட்டடம் பகுதியளவில் பலத்த சேதமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கதிர்வீச்சு அபாயம் குறித்த தகவல் வெளியாகவில்லை. அணுமின் நிலையம் அருகே தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது சர்வதேச அளவில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அணுமின் நிலையம் தவிர, ஈரானின் முக்கிய எல்லைப் பாதுகாப்பு மற்றும் துறைமுக நகரங்களான பந்தர் அப்பாஸ் மற்றும் கொனாரா ஆகிய கடலோரப் பகுதிகளும் அமெரிக்காவின் தொடர் குண்டு வீச்சுகளுக்கு உள்ளாகி வருகின்றன.

ஹார்முஸ் ஜலசந்தி வழியே செல்லக்கூடிய சர்வதேச வணிகக் கப்பல்களை ஈரான் ராணுவம் தொடர்ந்து தாக்குவதாக குற்றம் சாட்டி அமெரிக்கா இந்தத் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இரு நாடுகளுக்கும் இடையே நிலவி வந்த தற்காலிகப் போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்துவிட்டது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

ஒப்பந்த முறிவுக்குப் பிந்தைய கடந்த 48 மணி நேரத்தில் மட்டும், ஈரானின் கடலோரப் பகுதிகளில் உள்ள சுமார் 170 இற்கும் மேற்பட்ட இலக்குகளை அமெரிக்கப் படைகள் தாக்கியுள்ளன.

கடந்த 2 நாட்களில் அமெரிக்கா நடத்திய தாக்குதல்களில் தங்கள் நாட்டில் 14 பேர் உயிரிழந்ததாக ஈரான் சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# ல் மீண்டும்

# ாக்க தயார்!

## ரேல் அதிரடி

**க தனது இராணுவ நடவடிக்கையை**
**க தயாராக இருப்பதாகவும், அதை**
**யும் விட அதிக பலத்துடன்" செய்யத்**
**இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர்**
**தெரிவித்தார்.**

வேண்டியிருந்தால், இன்னும் அதிக பலத்துடன் யுத்தத்திற்கு திரும்பிச் செல்வோம்," என்று காட்ஸ் ஒரு இராணுவ விழாவில் கூறியுள்ளார்.

விழாவில் பேசிய" பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இஸ்ரேல் இதற்கு முன்னர் நடத்திய இரண்டு இராணுவ நடவடிக்கைகளால் ஈரான் பலவீனமடைந்துள்ளது என்று கூறினார். ஆனால், மோதல் இன்னும் முடிவடைய வில்லை என்பதையும் அவர் ஒப்புக் கொண்டார்.

இஸ்ரேலிய விமானப்படையின் நீண்ட கரத்தால் ஏமன் முதல் ஈரான் வரை எங்கும் சென்றடைய முடியும் என்பதை நாங்கள் நிரூபித்துள்ளோம்.

ஆயினும், இந்தப் போர் நடவடிக்கை இன்னும் முடிவடைய வில்லை என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். (3)

## சீனாவின் காலணித் தொழிற்சாலையில்

# பயங்கர தீ விபத்து

### 28 பேர் உடல் கருகி உயிரிழப்பு



(பீஜிங்)

தென்கிழக்கு சீனாவின் சின் ஜியாங் நகரில் உள்ள ஒரு காலணித் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் குறைந்தது 28 பேர் உயிரிழந்ததாக சீன அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளிகளின்படி, எரிந்து கொண்டிருந்த கட்டடத்திலிருந்து அடர்த்தியான கரும் புகை வானத்தை நோக்கி எழுந்தது.

நூற்றுக்கணக்கான மீட்புப் பணியாளர்கள் விரைந்து வந்து, தொழிற்சாலைக்குள் இருந்த 200 இற்கும் மேற்பட்டோரை பாதுகாப்பாக வெளியேற்றியதாக அரசு ஒளிபரப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் இந்த விபத்தில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இந்த துயரச் சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், இந்த தீ விபத்து பெரும் உயிர் இழப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறினார்.

விபத்துக்கான காரணத்தை உடனடியாக விசாரித்து, பொறுப்பானவர்கள் அல்லது அலட்சியமாக செயற்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தீ விபத்து ஏற்பட்ட ஜின்ஜியாங் நகரம், சீனாவிலும் உலகிலும் "காலணித் தலைநகரம்" என்று அழைக்கப்படுகிறது.

தரவு அறிக்கைகளின்படி, உலகின் மொத்த காலணி உற்பத்தியில் கிட்டத்தட்ட 20 சதவீதம் இந்த நகரத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

அங்கு அமைந்துள்ள ஆயிரக் கணக்கான தொழிற்சாலைகள் ஆண்டுதோறும் 120 கோடிக்கும் அதிகமான ஜோடி காலணிகளை உற்பத்தி செய்கின்றன. (3)

## கோடிக்கணக்கில் ஏலத்திற்கு வரும்

# டைனோசர் எலும்புக் கூடு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உலகின் மிகப்பெரிய 'டி-ரெக்ஸ்' வகை டைனோசரின் முழுமையான எலும்புக் கூடு வரும் ஜூலை 14 ஆம் திகதி பிரம்மாண்ட ஏலத்திற்கு வருகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த டைனோசர் எலும்புக்கூடு சுமார் 250 கோடி ரூபாய்க்கு ஏலம் போகலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்த வரலாற்றுப் பூர்வமான ஏல நிகழ்வு உலகளாவிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சேகரிப்பாளர்கள் மத்தியில் பெரும் ஆவலைத் தூண்டியுள்ளது.

கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் வாழ்ந்த மாமிச உண்ணி வகை டைனோசர்களில் மிகவும் கொடூரமானதாகவும், வலிமையானதாகவும் கருதப்படுபவை இந்த டி-ரெக்ஸ் வகை டைனோசர்கள் ஆகும். இவற்றின் முழுமையான மற்றும் சிதையாத எலும்புக்கூடுகள் கிடைப்பது வரலாற்று ரீதியாக மிகவும் அரிதான ஒன்றாகும். இந்த எலும்புக்கூடு தொல்பொருள் சந்தையில் ஒரு புதிய சாதனையை படைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் சவுத் டகோட்டா மாகாணத்தில் உள்ள கேரி கஸ்லிக்கிங் என்பவருக்குச் சொந்தமான நிலப்பகுதியில் கடந்த 2021 ஆம் ஆண்டு இந்த பிரம்மாண்ட டைனோசர் எலும்புக்கூடு கண்டறியப்பட்டது.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பல மாதங்கள் கடினமாக உழைத்து, 38 அடி நீளமும் 12.5 அடி உயரமும் கொண்ட இந்த ராட்சத டி-ரெக்ஸ் எலும்புக்கூட்டை முழுமையாக அகழ்ந்து எடுத்தனர்.

இந்த அரிய கண்டுபிடிப்பை நிகழ்த்திய நிலத்தின் உரிமையாளரான கேரி கஸ்லிக்கிங் தற்போது மறைந்துவிட்ட நிலையில், ஜூலை 14 ஆம் திகதி நியூயோர்க்கில் நடைபெறவுள்ள இந்த ஏலத்தின் மூலம் கிடைக்கப்பெறும் முழுத் தொகையும் சட்டப்பூர்வமாக அவரது குடும்பத்தினரையே சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை கம்பன் கழகத்தின்

## திருவள்ளுவர் திருக்கோயில் திறப்பு விழா நாளை

(கிளிநொச்சி)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் திருவள்ளுவர் திருக்கோயில் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி ஜெயந்தி நகர் கம்பன் கலைக்கோயில் வளாகத்தில் தமிழ்நாடு கோவிலூர் வேதாந்தமட குருமுதல்வர் சீர்வளசீர் நாராயண ஞான தேசிக சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பமாகி நடைபெற வுள்ளது.

மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜெ.விஸ்வநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்நாடு 'விஜிபி' குழுமத் தலைவர் செவாலியர் கலைமாமணி டாக்டர் வி.ஜி.சந்தோசம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தெற்காசிய ஸ்டான்டட் சார்ட்டட் வங்கி திருக்குறள் தேனீ வி.மகாலிங்கம், கௌரவ விருந்தினர்களாக ஸ்ரீ.ஐஸ்வர்ய லக்ஷ்மி தத்துவத் திருக்கோயில் தலைவர் செல்வி மாலா சபாரட்ணம், கொழும்பு கம்பன் கழகத் தலைவர் ஈ. கணேஷ் செல்வநாயகம், முல்லைத்தீவு அரச அதிபர் அ.உமா மகேஸ்வரன், வட மாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா, கிளிநொச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், "விவேகா" பயிற்சி நிலையத் தலைவர் கே.ரி.குருசாமி, வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன், வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் த.ஜெயசீலன், கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன், பூபாலசிங்கம் புத்தக சாலை உரிமையாளர் பூ.ஸ்ரீதரசிங், எஸ்.வி.எம். நிறுவன உரிமையாளர் எஸ்.வி.எம் குணரட்னம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்: மகம்
கி-பா-35
8இல்செவ்
உயரம்: 5"7"
தகைமை/தொழில்:Bsc,Msc, London
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16884

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்:சதயம்
உயரம்.5"2"
தகைமை/தொழில்: Machanical Engineer
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/16885

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:மூலம்
8இல்செவ்
உயரம்.5"7"
தகைமை/தொழில்: BBM, MBA, Banker
எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16888

பிறப்பு: 1993-இந்து
நட்சத்திரம்:சுவாதி
கிபா-28 1/2
உயரம்:5"3"
தகைமை/தொழில்: NDT, Bsc Teacher
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16890

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி-பா-28
தகைமை/தொழில்: Bsc, PHD, Lecturer(Aus)
எதிர்பார்ப்பு: உயர்கல்வி
தொ.இ: B/16891

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: ரோகினி
தகைமை/தொழில்:College, English Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/16880

பிறப்பு 1993-இந்து
நட்சத்திரம்:மகம்
7இல்செவ்
கி-பா-49
உயரம்: 5"3"
தகைமை/தொழில்:BBM, BE, MEd, Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/16882

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம்: 5"2"
தகைமை/தொழில்:Bsc,Msc,London
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/16883

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: உத்தரம்
1இல்செவ்
உயரம்: 5"2"
தகைமை/தொழில்:BA, MA
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ:G/16886

பிறப்பு-1998 -இந்து
நட்சத்திரம்: பூராடம்
4இல்சூரிசெவ்
உயரம்: 5"4"
தகைமை/தொழில்:BA
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ:G/16887

தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 612



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## செவிச் செல்வம்

ஐயா உங்கள் பேச்சை தொடர்ந்து தினமும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!" என்றார் ஒருத்தர்.

"தொடர்ந்து கேட்கிறீர்களே, உங்களுக்குக் காது வலிக்கவில்லையா?" என்று கேட்டேன்.

"பேசுகின்ற உங்களுக்கே வாய் வலிக்கவில்லை என்கிற போது கேட்கிற எனக்கு எப்படி காது வலிக்கும்?" என்றார்.

நம் உடம்பில் ஓர் அதிசயம் என்ன தெரியுமா?

நிறைய நேரம் நாம் நடக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள் கால் வலிக்கும். நிறைய நேரம் வேலை செய்தால் கை வலிக்கும், உடம்பு வலிக்கும். நிறைய நேரம் பார்த்துக் கொண்டே இருந்தால் கண் வலிக்கும். நிறைய நேரம் பேசிக் கொண்டே இருந்தால் வாய் கூட வலிக்கும்.

ஆனால் நிறைய நேரம் கேட்டுக் கொண்டே இருப்பதினால் காது வலிப்பதில்லை!

அதனால் கேட்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் நம் பெரியவர்கள்.

திருவள்ளுவர், தேவையில்லாமல் வார்த்தைகளை உபயோகப்படுத்த மாட்டார்.

ஒரு திருக்குறள் என்று எடுத்துக் கொண்டாலே அதில் மொத்தம் ஏழு வார்த்தைகள். அவ்வளவுதான்.

அப்படி ஏழு வார்த்தைகள் மட்டுமே உள்ள ஒரு திருக்குறளில் வள்ளுவர் ஒரே சொல்லை 5 தடவை திரும்பத் திரும்ப பயன்படுத்தியிருக்கார் என்றால் அதை அந்த அளவுக்கு வலியுறுத்திச் சொல்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அது என்ன குறள்:

**"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை."**

செவிச் செல்வம் என்பது அவ்வளவு முக்கியமானது.

சுற்றலின் கேட்டல் நன்று.

அதிகம் கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் எவ்வளவு கேட்டாலும் காது வலிப்பதில்லை.

குறைவாக பேச வேண்டும். அதிகமா கேட்க வேண்டும்.

இன்னொரு விஷயம் கவனியுங்கள்.

நம் உடம்பில் கண்ணுக்கு மூடி இருக்கிறது. எதையாவது நாம் பார்க்க விரும்பாவிட்டால் உடனே கண்ணை மூடிக் கொள்ளலாம்.

நம் வாய்க்கு மூடி இருக்கிறது. பேச விருப்பமில்லையா? வாயை மூடிக் கொள்ளலாம்.

மூக்குக்குக் கூட மூடிக் கொள்கிற வசதி இருக்கிறது. எதையாவது முகர விருப்பமில்லையா, மூச்சை அடக்கி கொள்ளலாம்.

ஆனால் பாருங்கள் காதுக்கு மூடி கிடையாது. அதைக் கையாலே தான் மூட முடியும். யார் என்ன சொன்னாலும் அது நல்லதோ கெட்டதோ காதிலே விழுந்து கொண்டுதான் இருக்கும்.

அறிவு தான் நல்ல விடயங்களை எடுத்துக் கொண்டு கெட்ட விடயங்களை விட்டுவிடும்.

நல்ல கருத்துக்கள் நம் காதில் நிறைய விழுந்து கொண்டே இருக்க வேண்டும். அதைக் கேட்டு நாம் நல்லபடியாக வாழ வேண்டும் என்பது தான் படைப்பின் விருப்பம்.

ஆன்மிக வாதிகள் கூட ஒன்று சொல்வார்கள்.

அதாவது ஆன்மிகப் பாதையில் நீங்கள் முன்னேற வேண்டும் என்றால் முதலில் "சிரவணம்" செய்ய வேண்டும் என்பார்கள்.

அதாவது பெரியவர்கள் சொல்லும் நல்ல கருத்துக்களை கேட்க வேண்டும் என்று அதற்குப் பொருள்.

அதனால் யார் நல்ல கருத்துக்களைச் சொன்னாலும் அதை காது கொடுத்துக் கேளுங்கள்.

இவ்வளவு கருத்துக்களையும் நம் நேயர் ஒருத்தரிடம் சொன்னேன்.

அவரும் சரி, சரி என்று தலையாட்டிக் கொண்டே இருந்தார், பிறகு சொன்னார்:

"நீங்கள் சொல்வது சரிதான் சேர்.. காதுக்கு மூடி இல்லை என்பது மிகவும் சரி. அதனால் தான் உங்கள் இன்று ஒரு தகவல் கூட நாங்கள் விரும்புகிறோமோ இல்லையோ தினம் எங்கள் காதிலே விழுந்துகொண்டே இருக்கிறது!" என்றார்.

எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

"அப்படியா?" என்றேன். சட்டைக் கொலரைத் தூக்கி விட்டுக் கொண்டு. ஆனாலும், என்னை மாதிரி சில பேர் நீங்கள் தகவல் சொல்கிற சமயத்தில் காதில் மூடியில்லை என்று கவலைப்படுவதில்லை என்றார். "ஏன்?" என்று கேட்டேன்.

"காதை மூடுவதற்குத் தானே வசதியில்லை... ரேடியோவை மூடுவதற்கு வசதி இருக்கிறது அல்லவா..?" அதனால் உடனே அதை மூடி விடுவோம்! என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# ஜுலை 13 முதல் 17 வரை டெங்கு கட்டுப்பாட்டு வாரம்

### மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு

**(தருமபுரம்)** ..............................

**கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை டெங்கு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நளாயினி இன்பராஜ் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் டெங்கு நிலைமை மற்றும் டெங்கு நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கிளி நொச்சி மாவட்டத்தில் டெங்கு நோய் பரவும் வீதம் குறைந்த அளவு காணப் பட்டிருந்த போதிலும் முன் எச்சரிக்கையாக சுற்றுச்சூழல் மற்றும் பொது இடங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் பொது இடங்கள், வைத்தியசாலைகள், அரச சார்பற்ற திணைக்களங்கள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள் மற்றும் பிரதான வீதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவித்தார். (8-316)

# போசாக்கு மாதத்தை முன்னிட்டு மன்னாரில் விழிப்புணர்வு கண்காட்சி



(மன்னார்)

போசாக்கு மாதத்தை முன்னிட்டு மன்னார் மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஏற்பாடு செய்த தேசிய போசாக்கு மாத கண் காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை (9) காலை மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையில் இடம் பெற்றது.

மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரி.ஒஸ்மன் டெனி தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.எச்.எம். அஸாத் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், திணைக்கள அதிகாரிகள்,என பலரும் கலந்து கொண் டனர்.

குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் போதைப்பொருள் பாவனையினால் ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்தும், கையடக்க தொலைபேசியினால் ஏற்படும் சாதக பாதக நிலைமைகள் குறித்தும் மாணவர்களுக்கு தெளிவு படுத்தப் பட்டது. (8-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 360 | 300 | 250 | 280 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | -- | 220 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 600 | 1200 | 800 | 500 | 850 |
| தக்காளி | 350 | 500 | 500 | 350 | 400 | 400 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 200 | 150 | 240 | 200 | 140 |
| கோவா | 250 | 200 | 300 | 300 | 200 | 200 | 160 |
| கரட் | 400 | 360 | 400 | 380 | 400 | 400 | 330 |
| பூசணி | 200 | 240 | 200 | 150 | 200 | 180 | 140 |
| புடோல் | 120 | 150 | 200 | 200 | 250 | 140 | 180 |
| வாழைக்காய் | 150 | 150 | 250 | 200 | 200 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 300 | 400 | 350 | 200 | 360 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 200 | -- | 200 | 200 | 190 |
| பாகற்காய் | 1200 | 1000 | 800 | 700 | 1000 | 800 | 400 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 200 | 400 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 400 | 300 | 400 | 400 | -- | 350 |
| பயற்றங்காய் | 400 | 350 | 400 | 400 | 400 | 300 | 150 |
| லீக்ஸ் | 400 | 300 | 300 | 300 | 400 | 320 | 230 |
| பீற்றூட் | 350 | 450 | 500 | 400 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 500 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 450 | 600 | 400 | 350 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 600 | 450 | 500 | 400 | 450 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 200 | -- | 250 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 150 | 80 | 70 | -- | 80 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 200 | 450 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 150 | 110 | 100-140 | -- | 140 |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | 350 | 400 | -- | 300 |
| வெங்காயப்பூ | 350 | 300 | 400 | 300 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 180 | 200 | 200 | 110 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 80 | 70 | 100 | -- | 100 | -- | 60 |
| ஈரப்பலா | 200 | 200 | 100 | -- | 250 | -- | -- |

# இராசிபலன்

11.07.2026
ஆனி 27, சனிக்கிழமை
துவாதசி முன்னிரவு 11.46 மணிவரை

கார்த்திகை முற்பகல் 08.49 மணிவரை
சுப நேரம் 2.59-4.29 மணிவரை
இராகு காலம் 8.59-10.29 மணிவரை

சந்திராஷ்டமம்-
விசாகம்

**வளவன்**

**மேஷம்:** காலைப் பொழுதே கலகலப்பான செய் திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்பளை இனங்கண்டு கொள்விர்கள், பணிவாக பேசி காரியம் சாதிக்கும் நாள் , கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை கூடும் சூழ்நிலை ஏற்படலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம் , வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கடகம்:** இயல்பான வழி வகையில் இன்பங்கள் கூடும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலை ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்:** குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கன்னி:** மறைமுக எதிரப்புகள் மாறும் , தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பகள் இடம் பெறும் பூர்விக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு

**துலாம்:** சில பிரச்சினைகளை கண்டும் காணாமல் இருப்பது நல்லது, சேமிப்புக்கள் கரையும் வாய்ப்புண்டு, மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், காரிய நன்மையுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும் .

**தனுசு:** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபார விருத்தியுண்டு, கடன் சுமை குறைய ஒழுங்கு செய்வீர்கள் புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்:** ஏட்டிக்குப் போட்டியாக செய ற்பட்டவர்கள் மனம் மாறுவர், வீட்டு உப யோகப் பொருட்களை வா்ங்கி மகி ழும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மீனம்:** உறவினர்கள் உங்களுக்கு உதவ முன்வரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், முத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரலாம், வருமானம் திருப்தி வரும் வயைில் அமையும்.

**ஒரு நண்பன் என்ன பெறுகிறானோ அது நமக்கு நட்டமல்ல**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்**

# பொன்னியின் செல்வன்

**பாகம் - 5**

காவியத் தொடர்

**1085**





என்று யானைப்பாகன் கேட்டான். "அது எப்படிச் சொல்ல முடியும்? இளவரசர் வந்து கேட்டால் அல்லவோ சொல்லலாம்?" என்றான் மந்திரவாதி.

முருகய்யன் அதற்குமேல் அங்கே நிற்க மனமில்லாமல் ஓடி வந்துவிட்டான். நாளைக் காலையில் யானைக்கு மதம் பிடிக்கப்போகும் செய்தியை இளவரசரிடம் சொல்லி எச்சரிப்பதற்காகவே முக்கியமாக ஓடி வந்தான் இதையெல்லாம் கூறிவிட்டு முருகய்யன் மீண்டும் தேம்பி அழுதான்.

"அப்பனே! ஏன் அழுகிறாய்? நீதான் சமயத்தில் வந்து எச்சரிக்கை செய்துவிட்டாயே? இனி, நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்றார் பொன்னியின் செல்வர்.

"ஐயா! இதிலெல்லாம் என் மனைவி சம்பந்தப்படுவது பற்றித் தான் வருந்துகிறேன். ராக்கம்மாளைப் பற்றி என்ன நினைப்பது என்றே எனக்குத் தெரியவில்லை. அவளைப் பற்றிய பழைய சந்தேகங்கள் திரும்பி வருகின்றன!" என்றான் முருகய்யன்.

"அவளை நான் திருத்தி விடுகிறேன். நீ கவலைப்படாதே! உடனே திரும்பிப் போ! யானைப்பாகனை எப்படியாவது தேடிப் பிடித்து அழைத்துக்கொண்டு வா!" என்றார் இளவரசர்.

படகோட்டி முருகய்யன் போன பிறகு பொன்னியின் செல்வர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். முருகய்யன் கண்டது, கேட்டது இவற்றின் பொருள் என்னவாயிருக்கும் என்று ஊகத்தினால் அறிய முயன்றார். பழுவேட்டரையர்களின் உத்தேசம், பாண்டி நாட்டுச் சதிகாரர்களின் முயற்சி, இவற்றைக் குறித்து இளையபிராட்டி கூறியதை இளவரசர் நினைவு படுத்திக் கொண்டார். அந்தச் சதிகாரர்களின் முயற்சியில் இது ஒன்றாயிருக்கலாம். அல்லது வெறும் அசட்டுத்தனமாகவும் இருக்கலாம். எப்படியிருந்தாலும், காலையில் நாம் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி ஒரு முடிவுக்கு வந்தார். பிறகு, நிம்மதியாக நித்திரையில் ஆழ்ந்தார்.

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து பிரயாணத்துக்கு ஆயத்தமானார். மாளிகை வாசலுக்கு வந்தார். அங்கே கட்டியிருந்த யானை இளவரசரைப் பார்த்ததும் ஆதரவோடு துதிக்கையை நீட்டி அவரைத் தடவிக் கொடுத்துக் கொஞ்சியது. "யானைக்கு மதம் பிடிக்கும்" என்று மந்திரவாதி கூறியதாக முருகய்யன் சொன்னது இளவரசருக்கு நினைவு வந்தது. மதம் பிடிக்கும் என்பதற்கு அறிகுறி எதுவும் இல்லை.

"யானைப்பாகன் எங்கே?" என்று இளவரசர் உரத்த குரலில் கேட்டார். உடனே பல குரல்கள் "யானைப்பாகன் எங்கே?" என்று எதிரொலி செய்தன.

இளவரசரைப் போலவே அதிகாலையில் பிரயாணத்துக்கு ஆயத்தமாக ஜனங்கள் திரண்டு வந்திருந்தார்கள். அவர்களிடையே அகப்பட்டுக்கொண்டு முன்னால் வரமுடியாமல் திணறிக் கொண்டிருந்த முருகய்யனைப் பார்த்தார். அவனை நோக்கிச் சமிக்ஞை செய்யவே ஜனங்கள் அவனுக்கு வழிவிட்டார்கள்.

முருகய்யன் அருகில் வந்து இரவில் வெகுநேரம் தேடிய பிறகு தன் மனைவியை மாத்திரம் கண்டு பிடித்ததாகவும், அவள் தான் மயானத்துக்குப் போனதையெல்லாம் அடியோடு மறுத்து, முருகய்யனுக்குப் பித்துப் பிடித்துவிட்டது என்று கூறியதாகவும், யானைப்பாகன் அகப்படவே இல்லை என்றும் சொன்னான்.

(தொடரும்)

---

# சிறுவர் அரங்கம்

## பாசமுள்ள நாய்க்குட்டி



(நேற்றைய தொடர்ச்சி)

வண்டியிலிருந்து குதித்து என் பின்னால் வந்தது. நான் சாய்வு நாற்காலியில் போய்ச் சாய்ந்து கொண்டேன். புதிய சிவாஜி என்னைத் தொடர்ந்து வந்து அந்த நாற்காலி ஓரத்தில் படுத்துக் கொண்டது. அதன் கண்கள் வாசல் பக்கத்தையே பார்த்துக் கொண்டிருந்தன.

வேலைக்காரன் மோர் கொண்டு வந்தான், நாய் அழகாயிருக்கிறது என்று பாராட்டினான். பிறகு நான் என் வேலைகளைப் பார்க்க வெளியில் சென்றேன் பகல் உணவுக்கு வீட்டுக்கு வந்தேன். சமையல்காரரை நோக்கி "நாய்க்கு ஏதாவது சாப்பிடக் கொடுத்தீர்களா?" என்று கேட்டேன்.

"கொடுத்தேன் அது சாப்பிடவில்லை! தட்டில் வைத்தது அப்படியே இருக்கிறது!" என்றார் சமையல்காரர். நான் திரும்பிப் பார்த்தேன். நாயின் எதிரில் இருந்த தட்டில், பிசுக்கோத்துகள், சுட்ட உப்புக் கண்டத் துண்டுகள் வைத்தது வைத்தபடியிருந்தன. நாய் வாசற் கதவையே வெறித்துப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தது.

"ஒரு குவளை பால் கொண்டு வாருங்கள்" என்றேன். சமையற்காரர் கொண்டு வந்தார். தட்டில் ஊற்றி அதன் வாயருகில் தூக்கிப் பிடித்தேன். அதன் நாக்கு வெளியில் வரவேயில்லை. "சிவாஜி! சிவாஜி! பால்குடி" என்றேன். அது திரும்பிப் பார்க்கவேயில்லை.

மூன்று நாட்கள். அது படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவேயில்லை. எதையும் உண்ணவில்லை. கூப்பிட்ட குரலைக் கவனிக்கவேயில்லை. பழைய வீட்டுப் பாசத்தை அது மறக்க வில்லை என்பதை நான் புரிந்துகொண்டேன்.

தொலை பேசியில் அந்த வீட்டுக்காரரை அழைத்தேன். "உங்கள் நாய் மூன்று நாட்களாக ஒன்றும் சாப்பிடவில்லை. நீங்கள் கொஞ்சம் வருகிறீர்களா?" என்று அழைத்தேன். உடனே அவர் புறப்பட்டு வந்தார். நான் வாசற்படியில் அவர் கால் வைத்தது தான்: உடனே, சிவாஜி எழுந்து பாய்ந் தோடியது. வாலை ஆட்டிக் கொண்டே அவரைச் சுற்றிச் சுற்றி வந்தது. முன் கால்களைத் தூக்கி அவர் மீது வைத்துக் கொண்டு நின்றது.

"இவ்வளவு அன்பான தோழனை ஏன் விற்க நினைத்தீர்களோ தெரியவில்லை. உங்கள் துன்பம் எதுவோ அதை நான் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. உடனே உங்கள் நாயை வீட்டுக்கு அழைத்துச் சென்று ஏதாவது சாப்பிடக் கொடுங்கள். இங்கிருந்தால் அது இறந்து போகும்" என்றேன்.

அவர் தலை குனிந்தார். வீதியை நோக்கி நடந்தார். சிவாஜி பின் தொடர்ந்தது. ஒரு நல்ல பணி செய்த நிறைவு என் மனத்தில் ஏற்பட்டது.

வந்தவரை வரவேற்று மோர் கூடக் கொடுத்து உபசரிக்காமல், சினந்து பேசியனுப்பி விட்டேனே என்ற உணர்வு பிறகு தான் எனக்குத் தோன்றியது. யாரிடமாவது நாய்க்குட்டி யிருந்தால் சொல்லுங்கள். நானே வளர்க்க ஆசைப்படுகிறேன்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

~ திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்களின் காணிகளை அபகரிப்பது எந்த வகையில் நியாயமாகும்

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

மாவட்ட செயலர்களுடனான கலந்துரையாடலின் போதே மேற்போந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

ஆம், இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மாவட்ட செயலர்கள் மத்தியில் கூறிய அதே நேரம், பலாலி பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகளை விடுவிக்க முடியாது எனப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.

ஆக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறுவதும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறுவதும் ஒன்றுக்கொன்று முரண்படுவதாக உள்ளது.

அதேநேரம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் அமைச்சர்கள் இல்லையோ என்று நினைக்கின்ற அளவில் நிலைமை வந்துள்ளது.

ஆம், பலாலி பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகளை விடுவிக்க முடியாது எனக் கூறுவதானது ஒரு சர்வாதிகாரப் போக்கின் வெளிப்பாடாகும்.

ஆம், பலாலியில் தமிழ் மக்களின் காணிகளை படைத்தரப்பு கபளீகரம் செய்து அதனை உயர் பாதுகாப்பு வலயமாக வைத்துள்ளது.

உண்மையில் பலாலியில் படைத்தரப்பு வைத்திருக்கின்ற ஏராளமான காணிகள் நம் மக்கள் குடியிருந்த – விவசாயம் செய்த நிலங்களாகும்.

எனவே அங்கு குடியிருந்த மக்கள் இடம்பெயர்ந்த காலத்தில் இருந்து இன்று வரை வாடகை வீடுகளிலும் உறவுகளின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், தாங்கள் வாழ்ந்த பலாலி மண்ணுக்கு எப்போது செல்வோம் – நாம் பிறந்த மண்ணில் எப்போது குடியிருப்போம் என்ற ஏக்கத்துடன் அவர்கள் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் பலாலி பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகளை 'விடுவிக்க முடியாது எனப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகர கூறுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சியில் இப்படியான ஓர் அறிவித்தலைப் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் வெளியிடுவாராக இருந்தால், கடந்த கால அரசுகளே தொடர்ந்தும் ஆட்சியில் இருந்திருக்கலாம் என்ற எண்ணமே தமிழ் மக்களிடம் எழுகிறது.

ஆம், பலாலி பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகளை விடுவிக்க முடியாது எனத் துணிந்து கூறுகின்ற அமைச்சரிடம் நாம் கேட்கக் கூடியது; பலாலியில் குடியிருந்தவர்கள் சிங்கள மக்கள் என்றால், நீங்கள் அப்படிக் கூறுவீர்களா?

ஆக, தமிழ் மக்களின் காணிகள் என்பதால் உங்களின் அடக்குமுறைகளும் அதர்மத்தனங்களும் சர்வசாதாரணமாக பிரயோகிக்கப்படுகின்றன என்றே கருத வேண்டியுள்ளது.

ஆக, எதுஎவ்வாறாயினும் படைத்தரப்பின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை உடனடியாக விடுவிப்பதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நடவடிக்கை எடுப்பதுதான் நீதியும் தர்மமுமாகும்.

# வடக்கில் இராணுவத்தைக் குறைத்து பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்க

## பாராளுமன்றில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

வடக்கில் இராணுவ பிரசன்னத்தைக் குறைத்து, பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தால் அங்கு சுற்றுலாத்துறையை ஊக்குவித்து, பொருளாதார நிலைகளையும் அபிவிருத்தி செய்ய முடியும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (10) நடைபெற்ற அமர்வின்போது ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தியினால் கொண்டுவரப்பட்ட யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத் துறை சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது, யாழ். மாவட்டத்தைச் சுற்றுலா பிரதேசத்தின் முக்கியமான மையப் பிரதேசமாக மாற்றுவதாக இருந்தால் அதற்கான போக்குவரத்து ஸ்தானங்களை உறுதிப்படுத்த வேண்டும். இதில் முதலாவது பலாலி விமான நிலையம் முக்கியமானது. இந்தியா இதனை அபிவிருத்தி செய்யத் தயாராக இருந்தாலும் முன்னைய அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் அந்த உதவியை பெற்றுக் கொள்ளத் தயங்குகின்றனர்.

மூன்று கட்டமாக அந்த விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய இணங்கியிருந்தது. அதில் ஓடுபாதை அபிவிருத்தியைச் செய்ய வேண்டும். பிராந்திய விமானங்கள் வந்து இறங்கக்கூடியவாறு இருக்க வேண்டும். அப்படியென்றால் சிங்கப்பூர், டுபாய் போன்ற இடங்களில் இருந்து விமானங்களை இறக்கக் கூடியதாக இருக்கும்.

இந்தியா இலவசமாக அதற்கான உதவியை வழங்க முன்வந்த போதும் அதனை அனுபவிக்காமல் இருப்பது துரதிஷ்டவசமானது. இதன்படி அதனை அபிவிருத்தி செய்ய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இதேவேளை புலம்பெயர் தமிழ்மக்கள் சுற்றுலாப் பயணிகளாக வருவதற்கு ஆர்வமாக இருக்கின்றனர். அவர்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் அவர்கள் வரத் தயாராக இருக்கின்றனர். இதற்காக முதலாவதாக அங்கு இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்க வேண்டும்.

இராணுவ எண்ணிக்கையை ஒரு இலட்சமாகக் குறைப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார். அவ்வாறு கணிசமான மாற்றம் ஏற்பட்டால் எமது மண்ணை சார்ந்த மக்களே யாழ்ப்பாணத்திற்கு வந்து முதலீடுகளைச் செய்து பொருளாதார இருப்புகளை முன்னேற்றலாம் என்றார். (ம-7)

# அரிசிக்கான சந்தை வாய்ப்பை விரிவுபடுத்துவதற்குத் திட்டம்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

நாட்டின் அரிசி நுகர்வை உணவாக மாத்திரம் மட்டுப்படுத்தாமல், அரிசி சார்ந்த ஏனைய துணை உற்பத்திகளுக்கும் பயன்படுத்துவதன் மூலம் அரிசிக்கான சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கெபித்திகொல்லாவ பிரதேசத்தில் நேற்றுப் புதிய நீர்த் திட்டமொன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நாட்டின் நெல் உற்பத்தி குறைந்த மட்டத்தில் இருந்ததால், அரிசியிலிருந்து ஏனைய உற்பத்திகளை மேற்கொள்வதைத் தடை செய்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததாகவும் தனது அரசாங்கம் அந்த வர்த்தமானி அறிவித்தலை நீக்க நடவடிக்கை எடுத்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நெல் உபரி காணப்படும் காலங்களில் விவசாயிகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைத் தவிர்த்து, சந்தையில் நெல்லுக்கான அதிக போட்டித்தன்மையையும் நியாயமான விலையையும் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி கூறினார்.

எதிர்காலத்தில் நாட்டில் சோறு தவிர, கால்நடைத் தீவனம், பியர், வைன், பிஸ்கட் மற்றும் கேக் வகைகள் உள்ளிட்ட பல்வேறு மதிப்புக் கூட்டப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கு அரிசியைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-7)

## தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையானது 2026 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கான முழுநேர கற்கைநெறிகள் 06.07.2026 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகின்றன.

தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர், மின் னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், அறை பராமரிப்பு சேவையாளர், நீர்க்குழாய் பொருத்துனர், முச்சக்கர வண்டி பொறிவலர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடைவடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலைவல்லுநர், விரைவு சேவை உணவு வழங்குநர், முதியோர் பராமரிப்பாளர், டீசல் பெற்றோல் வாகன இயந்திர பொறிவலர், கட்டட நிர்மாண உதவியாளர், கணினி வன்பொருள் திருத்துனர், கணனி பட வரைநர், குளிரூட்டி மற்றும் வளிசீராக்கி திருத்துனர், மரவேலை தொழிநுட்பவியலாளர் போன்ற கற்கைநெறிகளிற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக்கற்கைநெறிகள் அனைத்தும்தேசிய தொழில்தகைமை மட்டம் 4 (NVQ - 4) சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும்.

கா.பொ.த. சாதாரண தர, கா.பொ.த. உயர்தரம் கற்று மேற்படிப்பு கற்க முடியாதவர்கள் மற்றும் வேலைவாய்ப்பின்றி இருப்பவர்கள் உடனடியாகத் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 15.07.2026ம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம். இல 12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்களினைப் பெற்றுக்கொள்வதற்கு 021 222 7949, 071 031 8737, 077 613 9307 தொடர்பு கொள்ளமுடியும். (ம-7)

## மெகசின் சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையே மோதல்

(கொழும்பு)

கொழும்பு மெகசின் சிறைச்சாலையிலுள்ள ஐந்து கைதிகளுக்கிடையே மோதல் ஒன்று ஏற்பட்டுள்ளது.

நேற்று (10) பிற்பகல் இந்த மோதல் இடம்பெற்றுள்ளதுடன், மோதலில் காயமடைந்த இரண்டு கைதிகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டத்தில் குடிநீரின் வன்மை

## நிலத்தடி நீரியல் பின்னணி, சுகாதார விளைவுகள் மற்றும் பொருளாதாரத்திற்கு ஏற்ற தீர்வுகள்

முந்தைய காலங்களில், நாம் குடிக்கப் பயன்படுத்திய நீர் தூய்மையும் இயற்கைச் சீர்மையும் நிறைந்த "ஆரோக்கியமான நீராகக்" காணப்பட்டது. கிணறு, ஊற்று, ஏரி போன்ற இயற்கை நீர் மூலங்களிலிருந்து பெறப்பட்ட நீர் உடலுக்குத் தீங்கு விளைவிப்பதில்லை என்ற உறுதியான நம்பிக்கை அக்கால மக்களிடையே நிலவியது.

ஆனால் இன்று நிலைமை முற்றிலும் மாறியுள்ளது. நாம் தினமும் குடிக்கும் நீர் உண்மையில் நம் உடல்நலத்திற்குப் பொருத்தமானதா? எனும் கேள்வி தவிர்க்க முடியாத ஒன்றாகியுள்ளது. நிலத்தடி நீர் அளவில் குறைவடைதல், நீரின் தர மாற்றம், அதிகரிக்கும் நீர் வன்மை, மனித செயற்பாடுகள் காரணமாக உருவாகும் மாசுபாடுகள் மற்றும்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

நாள்பட்ட சிறுநீரக நோய் (CKD) போன்றவை இன்று நாம் பருகும் குடிநீரை நம் ஆரோக்கியத்திற்கான சவாலாக மாற்றியுள்ளன. இத்தகைய சூழலில், நாம் பயன்படுத்தும் குடிநீரின் தரத்தை அறிவியல் ரீதியாகப் புரிந்து கொண்டு, அதன் உடல்நல விளைவுகளைத் தெரிந்து கொள்வது காலத்தின் கட்டாயமாகியுள்ளது.

இலங்கை நாட்டின் வட மாகாணம், குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்கள், தனித்துவமான புவியியல் அமைப்புகளால் அடையாளம் காணப்படுகின்றன. யாழ்ப் பாணப் பகுதி பெரும்பாலும் சுண்ணாம்புக் கற்களால் (lime stone) ஆன கர்ஸ்ட் (karst) புவியியல் அமைப்பைக் கொண்டது. இந்த கர்ஸ்ட் அமைப்பானது அதிகமான பிளவுகளையும் சுண்ணக் கரடுகளையும் கொண்டுள்ளதால், நிலத்தடி நீர் பாறைத் தொடர்பு அதிகரிக்க ஏதுவாகிறது.

அதிக ஊடுருவும் தன்மையைக் கொண்ட இச்சுண்ணாம்புக் கற்கள் காரணமாக, சிறிய அளவு பருவ மழை கூட இந்நீரடுக்கை (aquifer) விரைவாக நிரப்பும் திறன் கொண்டது. இப்புவியியல் அமைப்பின் விளைவாக, கல்சியம் ($Ca^{2+}$) மற்றும் மக்னீசியம் ($Mg^{2+}$) போன்ற அயன்கள் நீரில் எளிதில் கரைந்து சேர்ந்து, நீரின் வன்மையை அதிகரிப்பதோடு விவசாயம் மற்றும் பிற மாசுபாட்டு மூலங்கள் இதனுள் இலகுவாகச் சென்றடைவதற்கும் ஏதுவாக அமைகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலத்தடி நீர் அமைப்பு, கடல் நீரின் மேல் மிதக்கும் மெல்லிய குவிவுவில்லை (lens) வடிவ நிலத்தடி நீரடுக்காகக் (aquifer) காணப்படுகிறது. ஆகையால், இது உப்பு நீர் ஊடுருவலாலும் மிகவும் பாதிப்புக்குள்ளாக்குகிறது உள்ளது. மறுபுறம் நாம் வவுனியா மாவட்டத்தின் புவியியலமைப்பை நோக்குவோமானால் அது படிகப் பாறைகளுக்கு (crystalline rocks) மேலான கடினப் பாறைகள் (hard rocks) மற்றும் மண் அடுக்குகளால் அமைந்த பகுதியாக இருப்பதால், இங்குள்ள நிலத்தடி நீர் இயற்கையாகவே அதிக வன்மைத் தன்மையைக் கொண்டதாகக் காணப்படுகிறது.

அது மட்டுமன்றி, இங்கு காணப்படும் அடிப்பாறைகள் பெரிதும் கிரானைட் (granite) மற்றும் க்னைஸ் (gneiss) போன்ற மாற்றுப் பாறைகளாக உள்ளன. இவ்வகை கடினப் பாறைகள் தண்ணீரை அதிகமாகத் தாங்கும் திறன் குறைவாகக் கொண்டவையாகும்.

ஆனால், இந்தக் கடினப் பாறைகளின் மேற்பகுதியில் அமைந்துள்ள ரெகோலித் அடுக்கானது (Regolith aquifer) ஒப்பீட்டளவில் அதிகமாக நீரைச் சேமிக்கக் கூடியது.



ஆகையால் வவுனியாவில் நிலத்தடி நீர் பெரும்பாலும் இந்த அடுக்கில் சேமிக்கப்படுகிறது. இங்கு நிலத்தடி நீரின் மீள்நிரப்பானது பெரும்பாலும் மழை வீழ்ச்சியின் மூலமே நடைபெறுகிறது. மழைநீர் இங்குள்ள ரெகோலித் அடுக்கின் வழியாக மெதுவாக ஊடுருவி, அதிலுள்ள துளைகளிலும் சிதைவுகளிலும் சேமிக்கப்பட்டு நிலத்தடி நீரின் முக்கிய நீர் நிரப்பு மண்டலமாக செயற்படுகிறது. வவுனியாவில், கிராமக் குளங்களின் அடுக்குத் தொடரமைப்பானது பெரும்பாலும் மேற்பரப்பில் அமைந்துள்ள நிலையில், அதற்குக் கீழ்ப்பகுதியில் படிகப் பாறைகளின் மேல் உருவான ரெகோலித் நிலத்தடி நீர்ப்படலம் தொடர்ச்சியாக அமைந்து செயற்படுகிறது.

மேலும், இக்கிராமியக் குளங்களின் அடுக்குத் தொடரமைப்புப் (Village Tank Cascade System) முறையும் குறைபாட்டினால் வவுனியா வாழ் மக்கள் குடிநீர்த் தேவைக்காக பெரிதும் நிலத்தடி நீரையே நம்பி வாழும் நிலை காணப்படுகிறது. குறிப்பாக மக்கள் தொகை அதிகரிப்பு, நிலத்தடி நீரின் மிகை நுகர்வு, நகரமயமாக்கல், நிலப் பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் அடுக்குத் தொடரமைப்பில் (cascade system) திட்டமிடப்படாத கட்டிட மேம்பாடுகள் இப்பிராந்தியத்தில் நிலத்தடி நீர் மாசுபாட்டை அதிகரிப்பதில் கூடுதல் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நாம் தினமும் குடிக்கும் நீர் உண்மையில் எவ்வளவு 'மென்மையானது' அல்லது 'வன்மையானது' என்பதை நாம் ஒரு போதாவது சிந்தித்திருக்கிறோமா? தண்ணீரில் கரைந்துள்ள கல்சியம் ($Ca^{2+}$) மற்றும் மக்னீசியம் ($Mg^{2+}$) அயன்களின் அளவை அடிப்படையாகக் கொண்டு நீரின் வன்மை நிர்ணயிக்கப்படுகிறது

இந்த நீர் வன்மை பொதுவாக $CaCO_3$ (கல்சியம் கார்பனேட்) mg/L அளவீட்டில் கணக்கிடப்படுகிறது. நீரின் வன்மை பொதுவாக இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது: அவை தற்காலிக வன்மை மற்றும் நிரந்தர வன்மை என்பனவாகும். தற்காலிக வன்மை என்பது பைகார்பனேட் ($HCO_3^-$) வடிவில் உள்ள கல்சியம் ($Ca^{2+}$) மற்றும் மக்னீசியம் ($Mg^{2+}$) அயன்களால் ஏற்படுகிறது. இவ்வன்மையை நீரை கொதிக்கவைத்து எளிதாக குறைக்கலாம். இதற்கு மாறாக, சல்பேட் ($SO_4^{2-}$) மற்றும் குளோரைட் ($Cl^-$) உப்புகளால் ஏற்படும் நிரந்தர வன்மையானது நீரைக் கொதிக்க வைத்தாலும் நீங்காது.

வவுனியாப் பல்கலைக்கழக உயிரியல் துறை மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின்படி, நீரைக் கொதிக்க வைத்தாலும் கூட நீரின் வன்மையானது சுமார் 43% சதவீதம் மாத்திரமே குறைக்கப்படுவதோடு குடிநீர்த் தர நிலைகளை மீறியதாகவே காணப்படுகிறது. ஆகையால் நீரின் வன்மையை நீக்கப் பொதுவாக இரசாயன வீழ்படிவாக்கம் (chemical precipitation), அயன் பரிமாற்றம் (ion exchange) மற்றும் இன்று அதிகளவில் நடைமுறையிலுள்ள பிரசாரண வடிகட்டல் (RO) போன்ற மேம்பட்ட முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

உலக சுகாதார தாபனத்தின் (WHO) வழிகாட்டுதலின்படி, 0-60 mg/L மென் நீராகவும், 60-120 mg/L மிதமான வன் நீராகவும், 120-180 mg/L வன் நீராகவும், 180 mg/L-இற்கு மேற்பட்டது அதீத வன் நீராகவும் வகைப்படுத்தப்படுகிறது.

மேலும், 200 mg/L இற்கு மேற்பட்ட வன்மை நீரின் சுவை மற்றும் பயன்பாட்டை பாதிக்கக்கூடும். சுமார் ஒரு தசாப்த காலத்திற்கு முன்பாக, வவுனியாவில் நீரின் அதிக வன்மை காரணமாக, மக்கள் கனிமங்கள் கலந்த குடிநீர் போத்தல் அல்லது கொதித்தாறிய நீரை அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கினர்.

ஆனால், இன்றைய காலத்தில் வவுனியா வாழ் மக்கள் பெருமளவில் பிரசாரண வடிகட்டல் (RO) முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீரையே பயன்படுத்தி வருகின்றனர். பல ஆய்வுகளின் அடிப்படையில், வவுனியாவில் பல கிணறுகளில் மின்கடத்துத்திறன் (EC), புளோரைட் ($F^-$) மற்றும் வன்மை (Hardness) ஆகியன உலக சுகாதார அமைப்பின் (WHO) குடிநீர் தரநிலைகளை மீறுகின்றன. பல கிணறுகளில் நீரின் வன்மையானது 300 முதல் 1000 mg/L வரை காணப்படுகிறது.

மேலும் எமது வவுனியாப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட பிற கள ஆய்வுகள், வவுனியாப் பிரதேச செயலக குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகாமையிலுள்ள கிணறுகளில் அதிகரித்த மக்கள் செறிவாக்கம் காரணமாக மலம் மூலம் வெளிவிடப்படும் பக்டீரியாக்கள் (fecal coliform) அளவு அதிகரித்திருப்பதைக் காட்டுகின்றன. இப்பிரதேசத்தில் அதிகரித்த பக்றீரியா அளவைப் போலவே குடி நீரத் தர த்திலும் குறைவடைந்த நிலக்கீழ் நீரானது மக்களின் உடல்நலத்துடன் நேரடித் தொடர்புடையதாக உள்ளது.

குடிநீரின் மூலம் தேவைக்கதிகமான கல்சியம் மற்றும் மக்னீசியம் அயன்கள் உள்ளெடுக்கப்படுவது சிறுநீரகக் கற்கள் உருவாவதற்கான அபாயத்தை அதிகரிக்கிறது. முன் மேற்கொள்ளப்பட்ட பல மருத்துவ ஆய்வறிக்கைகளின் முடிவுகளின் படி, வவுனியா மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சிறுநீரகக் கற்கள் ஏற்படும் நிகழ்வு அதிகமாகப் பதிவாகியுள்ளது.

(தொடரும்)

பேராசிரியர் சுகன்யா தேவசி
வவுனியா பல்கலைக்கழகம்.

நௌஷாத் பாத்திமா சமாமா
உதவி விரிவுரையாளர்,
வவுனியா பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 30 வெளி மாவட்...

விவேகானந்தராஜா தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

சுற்றுச் சூழலை சீர்செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்.நகரப்பகுதி அதாவது யாழ்.கோட்டைச் சுற்று வட்டம், பேருந்து நிலையம், கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதி, போதனா வைத்தியசாலை சூழல் ஆகிய பகுதிகளில் வியாபார நிலையங்களுக்கும் வெளிநாட்டு சுற்றுலாவிகள் மற்றும் உள்ளூர் மக்கள் ஆகியோருக்கு நாளாந்தம் பல்வேறு வகையிலும் யாசகம் என்ற போர்வையில் அசௌகரியங்களை ஏற்படுத்தும் நபர்களை கட்டுப்படுத்துமாறு எம்மிடம் பல தரப்பினராலும் கோரிக்கை முன் வைக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்று குறித்த நடவடிக்கையை யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவின் கவனத்துக்கு எம்மால் கொண்டு செல்லப்பட்டது.

அத்துடன் யாழ்.மாநகரின் ஒத்துழைப்பையும் நாம் கோரியிருந்தோம்.

அதனடிப்படையில் யாழ்.மாநகரின் ஒத்துழைப்புடன் யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவின் வழி நடத்தலில் குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது வெளி மாவட்டங்களைச் சேர்ந்த 30 யாசகர்கள் மற்றும் வியாபார செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தோர் பொலிஸாரால் கைது செய்யப்படு யாழ். பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டபின் குறித்த நபர்கள் அவரவர் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் போது சிறுவர்கள் பலரும் வியாபார ரீதியில் குறித்த யாசகம் பெறும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வந்ததும் கண்டறியப்பட்டது.

இதையடுத்து குறித்த சிறுவர்களின் பாதுகாவலர்களாக இருப்போர் எச்சரிக்கப்பட்டு இனி வரும் நாட்களில் இவ்வாறு செயற்பட மாட்டோம் என்ற ஒப்புதலுடன் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,33)

## வாசனை சவர்க்...

றுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்ன கூறுகையில்,

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளில் போதைப்பொருள் வியாபாரம் இரகசியமான முறையில் இடம் பெற்று வருவதாக யாழ்.பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கையின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் உடுவில் பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே இவ்வாறு வாசனை சவற்காரங்களுடன் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரின் சோதனையின் போது வெளியிடமொன்றிலிருந்து பாசல் சேவிஸ் மூலம் வரவழைக்கப்பட்ட வாசனை சவர்க்காரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 7 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

கைது செய்ப்பட்ட நபர் ஏற்கெனவே 2023இல் ஒரு தடவையும் அதன் பின்னர் கடந்த மாதமும் சிறியளவிலான இதே குற்றங்களுக்காக கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட ஒருவராவார்.

கைதான நபரை மேலதிக விசாரணையின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே யாழ்.பொலிஸ் பிரிவில் இவ்வாரம் 23 பேர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். (ம-7,33,104)

## யாழில் போலி...

வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 2017ஆம் ஆண்டு 21 இலட்ச ரூபாய் பெறுமதியான போலி 5 ஆயிரம் நாணய தாள்கள் மற்றும் அதனை அச்சிடுவதற்குப் பயன் படுத்திய உபகரணங்கள் என்பவற்றுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அது தொடர்பிலான வழக்கு யாழ் மேல் நீதிமன்றில் நடைபெற்று வந்த நிலையில், நேற்றைய தினம் குறித்த வழக்கு தீர்ப்புக்காக எடுத்து கொள்ளப்பட்டபோது , குறித்த நபரை குற்றவாளியாக கண்ட மன்று 06 வருட கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கியது.

அதன்போது குற்றவாளி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, குறித்த சிறைத்தண்டனையை ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையாக வழங்க, மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அதனை நிராகரித்த மன்று, போலி நாணயத்தாள்களை புழக்கத்தில் விடுவது நாட்டின் பொருளாதார கட்டமைப்பையே பாதிக்கும் செயல். இது நாட்டிற்கு பேரழிவைத் தரக்கூடியது என்பதனை மன்று கருத்தில் கொண்டு, குற்றவாளிக்கு 06 ஆண்டு கால சிறைத் தண்டனையை உறுதி செய்வதாக தெரிவித்தது. (ம-7,33)

## யாழில்...

குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலை ஒன்றுக்கு அருகில் கடந்த 5 ஆம் திகதி இளைஞன் ஒருவரை 5 பேர் கொண்ட கும்பல் ஒன்று கடத்திச் சென்றுள்ளது.

கடத்தப்பட்ட இளைஞனை கைதடிக்குக் கொண்டுசென்ற குறித்த கும்பல் அவ்இளைஞனை நிர்வாணமாக்கி சித்திரவதை செய்தபின் காயங்களுக்குள்ளான நபரை வேறு ஒரு இடத்தில் தள்ளி விட்டுச் சென்றுள்ளது.

இந்நிலையில் குறித்த கார் வேகமாக செலுத்தப்பட்டுள்ள நிலையில், அதனை அவதானித்த சோதனை சாவடியில் இருந்த பொலிஸார், நிறுத்துமாறு சமிக்ஞை செய்துள்ளனர்.

எனினும் அந்தக் கார் சோதனை சாவடியில் நிறுத்தாமல் வேகமாகப் பயணித்துள்ளது.

இதனையடுத்து அந்தக் காரை பொலிஸார் துரத்திச் சென்று இடைமறித்து சோதனையிட்ட போது, அதில் வாள்கள் மற்றும் ஆயுதங்கள் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் காரின் கதவு மற்றும் ஆசனங்களில் இரத்தக் கறையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு சேட்டும் இரத்தங்களுடன் மீட்கப்பட்டது.

இதையடுத்து பொலிஸார் குறித்த ஐவரிடமும் விசாரணை நடத்தியதில் 2.5 கிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதுடன் பொலிஸாரின் தொடர்ச்சியான விசாரணைகளுக்கு அமைய கடத்தலுடன் தொடர்புடைய இளைஞனும் மீட்கப்பட்டு வைத்திய பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)


மஹஜன சம்பத — NLB
திகதி 2026.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 6244
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 7 2 8 4 7 7

அத சம்பத
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 8 4 7 7
சீட்டிழுப்பு இலக்கம் 0819

சுப தவசக — NLB
திகதி 2026.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 0368
வெற்றி இலக்கங்கள் மகரம் 02 25 32
2885

தன நிதானய
திகதி - 2026.07.10
சீட்டிழுப்பு இலக்கம் - 2274
H 05 15 52 81 H

மெகா பவர்
திகதி 10/07/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2592
L 20 29 40 52 71

ஜய — NLB
திகதி 2026.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 0512
W 3 4 4 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4486
சீட்டிழுப்பு திகதி 10.07.2026
E 08 11 22 77

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.07.10
சீட்டிழுப்பு இலக்கம் 1553
மீனம் 31 36 45 59 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பல் சம்பத — DLB
10.07.2026 வெற்றி வாரம் 0952
ஆங்கில எழுத்து D — 5 0 1 8 6 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,660,815.60

SUPER BALL — DLB
சீட்டிழுப்பு வாரம் 3218
சீட்டிழுப்பு திகதி 2026.07.10
தினம் வெள்ளிக்கிழமை
25000 பணப் பரிசு 26630
13 21 23 57 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,243,736.80

சனிதா — DLB
திகதி 10.07.2026 வெற்றி வாரம் 5379
20 22 52 69 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,512,648.00
15209

சசிரி — DLB
வெற்றி வாரம் 1048
சீட்டிழுப்பு திகதி 10.07.2026
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 11 21
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,932,120.00

ராசி — DLB
சீட்டிழுப்பு வாரம் 4930
சீட்டிழுப்பு திகதி 10.07.2026
தினம் வெள்ளிக்கிழமை
05 16 26 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,349,840.00

கப்ருக — DLB
2394
10.07.2026
E 35 06 15 19 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.312,872,422.00

அட கோடிபதி — ADA KOTIPATHI — DLB
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 3044
சீட்டிழுப்பு திகதி 2026.07.10
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,112,084.00
12 39 49 59 C


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வலி. வடக்கில்...

வலி. வடக்குப் பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் "கொமோண்டோ " பங்களா முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை 12ஆவது வாரமாக போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் கடந்த 1990 ஆம் ஆண்டு ஜூன் மாத காலப் பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப் பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில் அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

பல காலமாக போராட்டம் முன்னெடுத்தும் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்தனர். இந் நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை 12ஆவது வாரமாக போராட்டத்தை முன்னெடுத்தனர். (ம-7,33)

## நீதி அமைச்சருக்கு...

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட வன்முறைச் சம்பவம் காரணமாக உயிரிழந்த சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் கைதிகளின் பாதுகாப்பு தொடர்பில் தமது கடமையையும், பொறுப்பையும் அவர் நிறைவேற்றத் தவறியுள்ளதாக தெரிவித்தே, இவ்வாறு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுகின்றது.

அதற்கமைய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், நேற்று (10) பாராளுமன்றத்தில் வைத்து குறித்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளனர். (ம-7)

## நீர்கொழும்பு...

மான வன்முறைச் சம்பவங்கள் மற்றும் பிற சிறைச்சாலைகளில் கைதிகள் மீது சிறைக்காவலர்களால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் பழிவாங்கும் தாக்குதல்கள் குறித்து ஐ.நா மனித உரிமைகள் அலுவலகம் தனது கடுமையான கவலையையும் அதிர்ச்சியையும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் அலுவலகத்தின் ஊடகப் பேச்சாளர் ரவினா ஷாம்தாசனி விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில்,

இந்த வன்முறைகளில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த கைதிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் குடும்பங்களுக்கு உண்மை என்னவென்று தெரியவர வேண்டும் என்றும் இதற்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு பொறுப்புக் கூறல் உறுதி செய்யப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (ம-7)


**TECHNO WORLD**
**A/L தொழில்நுட்பப் பிரிவு**

**விசேட செயலமர்வு - 2026**

- 18, 19, 20 July 2026 – தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்.
- 21, 22, 23 July 2026 – பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்.
- 24, 25, 26 July 2026 – ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கனிதம் (07)

காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.15 மணி வரை
இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்
தொடர்புகளுக்கு : 077 017 5346 (C-6007)

**மணமகன் தேவை**

யாழ்.இந்து குடும்பத்தை சேர்ந்த 1992 ஆம் ஆண்டு பிறந்த அரச உத்தியோகம் பார்க்கும் பெண்ணிற்கு தகுந்த அரச/தனியார் தொழில் புரியும் மணமகன் தேவை. (7977)
தொடர்புகளுக்கு :
**077 377 4909**

**வேலையாள் தேவை**

- மேசன் (அனுபவமுள்ளவர்கள்) - Rs 4000.00
- மேசன் உதவியாளர் - Rs 3000.00
- வெல்டர் - Rs 4000.00
- வெல்டர் உதவியாளர் - Rs 3000.00
- தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) - Rs 4000.00

(தேவைப்படின் தினசரி சம்பளம் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.) தொடர்பு :- 077 724 5399 (காலை 8.00 மாலை 5.30 வரை.) யாழ்ப்பாணம். (2497)

**மணமகன் தேவை**

UKயில் வசிக்கும் 1988ம் ஆண்டு பிறந்த ரிஷபம் ராசி, ரோகிணி நட்சத்திரம் உடைய அழகான மணமகளுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன் தேவை. (தரகர்கள் தொடர்பு கொள்ளத் தேவையில்லை.) (2502)
**077 335 3461**

**வேலைவாய்ப்பு அறிவிப்பு**

கிளிநொச்சியில் அமைந்துள்ள உற்பத்தி நிறுவனத்தில் பணியாற்ற ஆர்வமுள்ள ஆண்/ பெண் தொழிலாளர்கள் தேவை.

தகுதிகள்
- வயது எல்லை : 22 – 45
- உடல் ஆரோக்கியம் மற்றும் பொறுப்புணர்வு
- குழுவாகப் பணியாற்றும் திறன்.

ஆர்வமுள்ளவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
(2493) T.P : 077 444 5265

**வேலையாட்கள் தேவை**

1. Technical Officer (TO) HND, NCT-Civil or NDT
2. Technical Assistant (TA)
3. Quantity Surveyor HND(QS) or NCT (QS)
4. Assistant Quantity Surveyor (AQS)
5. Civil Engineer BSc, BEng
6. Assistant Engineer NVQ Level 5 Diploma or HND in Civil Engineering

சுயவிபரக்கோவையை Whatsapp / Email மூலம் அனுப்பி வைக்கவும்.
Email - bestbuilder2003@gmail.com
TP - 077 210 0749 (2497)

**வேலையாட்கள் தேவை**

புத்தூரில் இயங்கும் அரைக்கும் ஆலை ஒன்றிற்கு வேலை ஆட்கள் (ஆண்) தேவை. (2496)
**077 373 5261**

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை வீதி நீர்வேலி வாழைக்குலை சந்தைக்கு அருகாமையில் 50m உள்ளே 4 பரப்பு 14 குளி காணி விற்பனைக்கு உண்டு. (8017)
**077 269 4142**
**072 935 6594**

**வெற்றித் தேர்வு வெளியீட்டகத்தின் மாபெரும் செயலமர்வு**

2026 தரம் 5 பரீட்சை புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான செயலமர்வு நடைபெறவுள்ளது.



இடம் : வெற்றித்தேர்வு பரீட்சை மையம் (நல்லூர் சயன்ஸ் அக்கடமி, நல்லூர், யாழ்ப்பாணம்)
காலம் : 12.07.2026 காலை 9.30 மணி

முற்பதிவு அவசியம். நேரிலும், தொலைபேசி ஊடாகவும் பதிவு செய்யலாம். (8022)

மேலதிக விபரங்களுக்கு : 077 312 6807

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரத்தில் 7 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு**

- ஒரு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.
- மானிப்பாய் நகரம் சோதி வேம்படி வித்தியாலயம் அருகில் வேம்படி வீதியில்.
- யாழ் - காரைநகர் பிரதான வீதி 300 m தூரத்தில்.
- வங்கிகள், பாடசாலைகள் பிரதான வர்த்தக நிலையங்கள் 400 m. தூரத்தில்.
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்.
- பார்வையிடும் நேரம் - காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- 074 029 2338
076 077 2674 (2501)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org